

# விடுதலைக்குரல் ★

குரல் 2. இல 2 ஆவணி. புரட்ட



இவ்விதழில், மேற்கு ஐரோப்பிய கழக அமைப்புக்களுடன் செயலதிபரின் கலந்துரையாடல்

# விடுதலைக்குரல் ★

ஆயுதப்போராட்டத்தை தவிர்த்து வேறுவழி ...ால் தமிழ்மக்களின் பிரச்சனைகளுக்கு ஸ்ரீலங்கா அர...ந்து ஒரு நிரந்தர தீர்வு கிடைத்து விடும் என்ற ...கில் கடந்த இரண்டுகட்டப் பேச்சுவார்த்தைகளி... தமிழ்ழம்க்க்ள் விடுதலைக்கழகம் பங்கு கொள்ளவில்லை.

இப்பேச்சுவார்த்தைக்காலங்களில் ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், போர்நிறுத்தமீறல் ஆயுதக்குவிப்பு, தமிழ்மக்கள் கொடுமைப்படுத்தப்படுதல் போன்றவையே. கழகம் இதை ஆழ்ந்த கவனத்தில் எடுத்துக் கொள்கின்றது. இது தமிழ் மக்களின் பிரச்சனைகளின் சமாதான தீர்வு ஒன்றை சாத்தியமாக்கும் காரணத்தில் செய்யப்படவில்லை. தமிழ்மக்களை ஒட்டுமொத்தமாக அழிப்பதற்கான நேரத்தைச்சம்பாதிக்கும் நோக்கில் அரசின் தந்திரமென்பதை கருத்தில்கொண்டு இதனை முறியடிக்கும் வகையில் கழகம் தனது நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

---

VIDUTHALAIKURAL
POSTFACH 106
7146 TAMM

## தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

**PEOPLE'S LIBERATION ORGANIZATION OF THAMILEELAM**

BRANCH: WEST GERMANY

இந்திய அரசின் நல்லெண்ணத்திறைல் ஒழுங்கு
யப்படும் இப்பேச்சுவார்த்தைகளில் தொலைநோக்கு
தமிழ்மக்களின் நலன்களைக்கருத்திற் கொண்டு செயல்
வதை வலியுறுத்தும் கழகம் சிறு பிள்ளைத்தனமாக
அல்லது ஏகாதிபத்திய அடுருவல்களினால் இப்பேச்
தைகளில் பொறுப்புணர்வற்று நடந்து கொள்வ
திபத்தியத்தை இந்து சமுத்திரப்பிராந்தியத்தில்
வதற்கே வழிவகுக்கும் என்பதை கவனத்திலெடுத்துள்ளது.

உலக ஏகாதிபத்தியத்தின் பாரியமக்கள் தொடர்புச்சாதனங்களால் பயங்கரவாதிகளென பட்டம்சூட்டப்பட்டு மனித நேயமிக்க உலகமக்கள் மத்தியில் இருந்து பிரித்துவைக்கும் ஏகாதிபத்தியச்சதிக்கு பலியாகாமல் லட்சக்கணக்கான தமிழ்மக்களின் விடுதலைக்குப்பொறுப் பெடுத்துள்ள கழகம் இப்பேச்சுவார்த்தைகளில் நிதானத்துடன் நடந்து கொள்வதன் மூலம் சர்வதேச நட்புச்சக்திகளை தமிழ்மக்களின்பக்கம் அணிதிரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டத்தை ஆரம்பமுதல் சரியான திசைவளியே தள்ளிச்செல்லும் தமிழ்மக்கள் விடுதலைக்கழகம் வெடிமருந்துகளை தண்ணீரில் நனைத்துவிட்டு பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளவில்லை 'அனைத்து அடக்கு முறைகளையும் உடைத்தெறிவோம்' என்ற கழகத்தின் இலக்சினை நிறைவேற்றும் நோக்கிலேயே செயல்படுகின்றது.


---

# வெளியேறு!!

...ல்லாம் பணம்படைக்க
...டு நாடுபோய்
...' எனும்செய்தி
... வரும்என்று!
...சி இளைத்து
பாடுபட்டு உழைத்து
பணம்தன்னைப் பெறுகின்றாய்
பெற்றிட்ட பணம்தன்னை
பெரும்பெரும் பொறுப்புகள்
குடும்பத்தில் உண்டென்றே
ஊருக்கு அனுப்புகின்றாய்;
ஊர் திரும்பி நீரும்
சிறப்புடன் வாழ்வதற்கு
சிறுதொகைப்பணம் தன்னை
சேமிப்பில் இடுகின்றாய்,
சொந்த மண் அழிகையில்
குடும்பந்தான் வாழ்ந்திடுமோ?
நீர்தபன் எங்கு வாழ்வீர்?
என்பதனை எள்ளளவும்
எண்ணத்தில் கொள்ளாமல்
சிதைந்திடும் சுவர்தன்னில்
சித்திரம் வரைகின்றாய்.
எமக்கு அனுப்பும் பணம்எல்லாம்
எம்மண்ணை அழிக்கின்ற
கொடுங்கோன்மை அரசுக்கு
ஆயுதங்கள் வாங்கிடவே
அந்நியச்செலவாணியை
அதிகமாய் அளிக்கின்றது.
அன்னையிலும் உயர்வன்றோ!
அன்னைமண் நமக்கென்றும்
அவள்துயர் துடைத்திடவே
துணிந்தெழுந்து புறப்படு
தாயகத்தை மீட்பதற்கு
படைதன்னில் சேர்ந்துமே
போர்தன்னைப் புரிந்திட
பலம் உனக்கில்லையென்றால்
பலம் கொண்டு புரட்சிக்கு
ஆயுதம் தாங்கியே
அணியணியாய் நிற்கின்
உறுதிமிக்க தோழருக்கு
உணவுமுதல் மருந்துவரை
இன்னோரன்ன தேவைக்கும்
எதிரியை அழித்திட,
படைப்பயிற்சி பெறுவதற்கும்
படைக்கருவி வாங்குவதற்கும்
பண உதவி புரிந்தாலே
பேருதவி அளித்திடும்
தாய்மண்ணை மீட்பதற்கு.

# " செயலதிபருடன் ஒரு கலந்துரையா

சமீபத்தில் ஐரோப்பிய நாடுகளில் பிரயாணம் செ
தமிழீழமக்கள் விடுதலைக்கழகச் செயலதிபர் தே
க. உமாமகேஸ்வரன், கழக அமைப்புக்களுடன் ெ
ண்ட கலந்துரையாடலில் இருந்து சில பகுதிகள்
பிரசுரமாகின்றன.



"எங்கள் போராட்டத்தில் ஏகாதிபத்திய ஊடுருவலுக்கு இடம் அளியாமல் ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியில் நிற்க வேண்டியது சர்வதேச தொடர்புகளை ஏற்படுத்த அவசியமாகிறது."

# ஐக்கிய முன்னணி தொடர்பாக....

(1) இயக்கங்கள் ஒன்று சேர்ந்து தமிழ்மக்களின் ...ந்த லேயை வென்றெடுப்பதை அரசியல்வாதிகள் ஒரு ...ாதும் விரும்பமாட்டார்கள். தமிழ்மக்களின் போரா ...ம் நடந்து கொண்டிருப்பதால் இந்த அரசியல்வாதி கள் அறிக்கைகள் வெளியிட்டுக்கொண்டு தமிழ்மக்களின் தலைவர்களாக மட்டும் அரசியல் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குப் பின்னால் தமிழ்மக்க ளைப்பிரதிநிதிப்படுத்துவதற்கான அமைப்பு ஒன்றும் இன் றைக்கு இல்லை. ஒரு அந்நிய நாட்டின் தலையீட்டால் விடுதலை பெறுவதையோ அல்லது பேச்சுவார்த்தையா ல் ஒரு தீர்வு வருவதையோ அவர்கள் விரும்புவார்கள் இந்த ரீதியிலான தீர்வுதான் இவர்களை தொடர்ந்தும் தலைவர்களாக நிலைநாட்டும். ஏதாவது ஒரு விடுதலை இயக்கம் அல்லது விடுதலை இயக்கங்கள் இணைந்து இப் போராட்டத்தை முன்னெடுத்தால் இவர்கள் புறக்கணிக் கப்படுவார்கள். எனவே இவர்கள் ஒரு முழுமையான போராட்டத்திற்கும், விடுதலை இயக்கங்களுக்கும் என்று ம் எதிராகவே இருப்பார்கள். இவர்களது தலையீடே இன்றுவரை ஒரு முழுமையான ஐக்கிய முன்னணிக்கு தடை யாக இருக்கின்றது.

83ம் ஆண்டு இனக்கலவரத்திற்குமுன் பு இருந்து சமீபத்தில் (மாசி 85) ஈழத்தேசிய விடு தலை முன்னணி உருவாகும்வரை தமிழீழமக்கள் விடுதலை க்கழகம் குறைந்தபட்ச வேலைத்திட்டத்திலான ஐக்கிய

முன்னணி ஒன்றை வலியுறுத்தி வந்ததுடன் அதற்கான ஆக்க பூர்வமான நடவடிக்கைகளில் முழுமனத்தோடு பங்கேற்று க்கொண்டு வந்தது. ஆனால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசியல்வாதிகளின் தலையீட்டாலும், ஏகாதிபத்திய சார்பு சக்திகளின் ஊடுருவலாலும் ஒரு ஐக்கிய முன்னணி உருவாகுவது முறியடிக்கப்பட்டது.

தமிழீழமக்களின் போராட்ட வரலாற்றில் அரசியல் தலைவர்கள் வெளிநாடுகளில் இருந்து உதவிகளைப்பெற்றுத்தருவார்கள் என நம்பி ஏமாற்றப்பட்டு அரசியல் தெளிவு பெற்று மக்கள் அமைப்புக்களை கட்டி எழுப்புவதில் வெற்றியடைந்து பல உலக நாடுகளின் உதவியையும், பல விடுதலை ஸ்தாபனங்களின் தோழமையான ஒத்துழைப்பையும் பெற்று தமிழ்மக்களின் போராட்டத்தை சரியே முன்னெடுத்திருக்கின்றோம்.

அந்த உலக நாடுகளோ அல்லது விடுதலை ஸ்தாபனங்களோ எமக்கு துணைநிற்பது, தமிழ்மொழியை தாய்மொழியாகவும், தமிழ்பண்பாட்டை தங்கள்பண்பாடாகவும் ஏற்றுக்கொள்வதற்கல்ல, அவர்களும் நாங்களும் ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தை முன்னெடுத்திருக்கின்றோம். ஏகாதிபத்தியம் எந்த மூலையில் உடைக்கப்பட்டாலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வெற்றி எனக்கருதுவதாலேயே. இந்நிலையில் ஏகாதிபத்திய சார்பு சக்திகளின் ஊடுருவலோடான ஒரு ஐக்கிய முன்னணியை உருவாக்குவதற்கு துணை நின்று, தமிழ்மக்களின் போராட்டத்திற்கு துணைநிற்கும் விடுதலை ஸ்தாபனங்களுக்கோ அல்லது உலக நாடுகளுக்கோ அல்லது கழகம் முன்வைத்து உள்ள கொள்கைகளுக்கோ துரோகம் செய்யத்தயாராக இல்லை.

7.110

இன்று தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிராகப் ...ாராடும் அனைத்து சக்திகளும் ஒரு ஐக்கிய முன்னணி ...ள் அணிதிரட்டப்பட வேண்டும். இவர்கள் அணிதிரட்ட ...டாமல் இருக்கும் வரையில் ஒரு தேசிய விடுதலைப் ...ராட்டத்திற்காகத்தான் போராடிக்கொண்டிருப்பா... இன்றுள்ள நசுக்கலைத் தூக்கி எறிந்து அடுத்த ...போராட்டத்திற்கு போகும் வரை இவர்களை ...கவேண்டிய தேவை இருக்கின்றன. இது தொடர்பான ஐக்கிய முன்னணி முதற்கட்டமாகவும் அதே நேரத்தில் இதற்குள் இருக்கும் நட்பு சக்திகளை இணைத்து அடுத்த கட்ட போராட்டத்திற்கு இழுத்துச் செல்லக்கூடிய ஐக்கிய முன்னணியை கட்டவேண்டும். இன்று முரண்பட்ட கருத்துக்களுடன் முரண்பட்ட நிலைப்பாட்டிலேயே இருக்கின்றோம். ஒரு இடத்தில் கூடி கொள்கையை அடிப்படையாக வைத்துப் பேசக்கூடிய நிலையில் இல்லை. வளர்ச்சிப் போக்கில்தான் இது சாத்தியமாகும்.

தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டத்தை சரியான திசையில் முன்னெடுப்பதற்கான ஐக்கிய முன்னணியை உருவாக்குவதற்கு கழகம் என்றும் தயாராகவே இருக்கின்றது. செய்திப் பத்திரிகைகளில் நாம் ஒன்றுபட்டுவிட்டோம் என்று விளம்பரம் செய்வதற்காகவோ அல்லது வெளிநாடுகளில் பணம் சேகரிப்பதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தலாம் என்பதற்காகவோ, ஐக்கிய முன்னணியை உருவாக்குவதில் எந்தவித அர்த்தமுமில்லை.

குறைந்தபட்ச வேலைத்திட்டத்தில் ஐக்கிய முன்னணியைக்கட்டாமல் விளம்பரத்திற்காக கட்டுவது எதிரியை பலப்படுத்துவதற்கே உதவும். நாம் ஒரு அடிப்படைவேலைத்திட்டத்தை கரிசனையாக கொள்ளாமல் ஐக்கிய முன்னணி-

ஒன்றை அமைப்பதும் பின்னர் தனித்தனியே போராடுவ
ஒருவிதத்திலும் விடுதலைப்போராட்டத்தை முன்தள்ளம
டாது. விடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுப்ப
கான வேலைத்திட்டத்தை கவனமாக வகுக்கவேண்டும்
அதை கரிசனையோடு நடைமுறைப்படுத்தவேண்டும்.
சில சந்தர்ப்பங்களில் நாங்கள் போன பாதை
இருக்கலாம். மற்றைய விடுதலை இயக்கங்கள் போ
பாதைகள் தவறாக இருக்கலாம் இவற்றைத்திருத்திக் கொண்டு மக்களின் விடுதலையைப்பெற ஒரு போராட்டத்தை வகுக்க வேண்டும்.

# சிங்களமுற்போக்குச் சக்திகள்

பாராளுமன்ற இடதுசாரி அரசியல் கட்சிகள் இவைகள் கடந்த காலங்களில் தேசிய இனப்பிரச்சனையை அணுகிய விதமும் சிங்கள, தமிழ் தொழிலாளி வர்க்க நலன்களை இனவாதத்திலும் புதைத்த வரலாறும் இவர்களுடன் ஒரு SOLIDARITY அடிப்படையில் தொடர்புகளை ஏற்படுத்த நிர்ப்பந்தித்திருக்கின்றது.

இக்கட்சிகளில் இருந்து பிரிந்த சில அமைப்புக்கள் தமிழீழவிடுதலைப்போராட்டத்தை முற்றுமுழுதாக அங்கீகரிப்பதுடன் தமிழ்மக்களின் பிரச்சனைகளை சிங்கள மக்கள் மத்தில் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கின்றன. கழகத்தின் அறிக்கைகளை சிங்கள மொழியில் மொழி பெயர்த்து சிங்கள மக்கள் மத்தில் வினியோகிப்பதுடன் தமிழீழவிடுதலைப்போராட்டம் வெற்றி பெற்றால் தான், சிங்கள தொழிலாளர் நலன்கள் பாதுகாக்கப்படலாம் என்றும் அறிக்கைகளை சிங்கள மக்கள் மத்தில்

ாகித்து இருக்கின்றார்கள். இந்த அமைப்புகளினது
க்கைகள் இப்பொழுது கணிசமான அளவு வளர்
ந்தாலும் பெரிய அமைப்புக்களாக வளர்ச்சி
ில்லை. இவர்களுடன் தொடர்புகளை வலுப்படுத்தி
றோம்.

இன்னும் சில அமைப்புக்கள் தமிழ்மக்களின் உரிமை, பிரிந்து போதல் என்பதில் மாறுபட்ட கருத்துக்களுடன் இருக்கின்றன. ஏகாதிபத்தியத்திற்கும் ஜெயவர்த்தன அரசுக்கும் எதிரான எங்கள் போராட்டத்திற்கு ஆதரவு தரும் இவர்களுடனும் SOLIDARITY அடிப்படையில்தான் தொடர்புகளை ஏற்படுத்தி இருக்கின்றோம்.

கடந்த காலங்களில் முதலாளித்துவ ஆட்சிக்கெதிராக சிங்கள மக்களை உடனடியாக திசைதிருப்புவதற்கு இனவாதத்தைபயன்படுத்தி வந்தார்கள். இன்று நாங்கள் எடுத்த முயற்சிகள் இனவாத அரசியலில் இருந்து ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. சிங்கள மக்களின் பிரச்சனையை அறிய "தமிழீழத்தின் குரல்" வானொலியை கேட்க வேண்டும் என்று பாராளுமன்றத்திலும், சிங்கள மக்களை தமிழ்பகுதிகளில் குடியேறவேண்டாம் என்று சிங்களமக்கள் மத்தியிலும்பேசுமளவிற்கு எங்கள் நடவடிக்கைகள் வழிசமைத்து இருக்கின்றன.

இதற்காக சிங்கள மக்கள் முழுப்பேரும் மாறி விட்டார்கள் நாங்கள் சிங்கள மக்களோடு சேர்ந்துதான் போராடப் போகின்றோம் என்று சொல்ல முடியாது. ஆனால் ஸ்ரீலங்காவில் இருக்கின்ற முற்போக்கு சக்திகள் சிங்கள மக்களுடைய அடிப்படை பிரச்சனைகளை இனவாத ரீதியில் அணுகாமல் இருப்பதற்கு தளம் அமைத்து

கொடுத்திருக்கின்றோம். இவர்கள் தங்களது பிரச்சனைகளைப் பேசுவதற்கு ஒரு இடம் இல்லாவிட்டால் இன சேற்றினுள் இன்னும் மூழ்கிக் கொண்டிருக்கவேண்டும். த ர்களுக்கெதிரான இனவாதத்தைத்தான் கம்யூனிஸ்ட் சி கூட பேசவேண்டும். இவர்களை இனவாத சேற் இருந்து இழுத்து விடும இந்த முதற்கட்ட போரா தில் வெற்றி பெற்று இருக்கின்றோம்.

## (3) வெளிநாட்டுத் தொடர்புகள் இராணுவப்பயிற்சிகள் —

ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகள்பல வற்றின் உதவிகளை பெற்றுக் கொண்டிருக்கின்றோம். ஐக்கிய நாடுகள் சபையில் அங்கீகாரம் பெற்ற பல விடுதலை இயக்கங்களிடம் இராணுபயிற்சிகளை பெற்றுக்கொண்டிருக்கின்றோம். முதலாளித்துவ நாடுகளில் உள்ள முற்போக்கு சக்திகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி இருக்கின்றோம். இவற்றை நாங்கள் படிப்படியாகத்தான் பாரிய அளவில் வளர்ச்சி பெறச் செய்ய முடியும் எங்கள் பேராட்டத்தில் ஏகாதிபத்திய ஊடுருவலுக்கு இடமளியாமல் ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியில் நிற்கவேண்டியது சர்வ தேச தொடர்புகளை வலுப்படுத்த அவசியமாகின்றது.

## (4) மக்கள் ஜனநாயகம்

நாங்கள் கூறும் மக்கள் ஜனநாயகம் தொழிலாளர் வர்க்க சார்புடைய மக்கள் ஜனநாயகம், சோசலிச அமைப்புக்கு போவதற்கு முன்னர் எங்கள் நாட்டின் முத

லாளித்துவ அமைப்பு முறைகள் முழுவதும் முறியடிக்கப்பட வேண்டும். இதை ஒரே காலகட்டத்தில் முழுமையாக முறியடித்துவிட முடியாது. இதுவே ஒரு வர்க்க போராட்டமாக இருந்தால் இந்த அமைப்பு முறையை முறியடிப்பது விரைவாகலாம். இன்று இருக்க கூடிய தொழிலாள வர்க்க சார்புடைய அமைப்பு, கூட்டுறவு அமைப்பு மட்டுமே. இது தவிர்ந்த மற்றறைய அமைப்புக்கள் முழுக்க பொருளாதார உற்பத்தி அடிப்படையில் முதலாளித்துவ அமைப்புக்கள் ஆகவே இருக்கின்றன. இதை எடுத்த எடுப்பிலேயே தூக்கி எறியும் போது நாம் ஒரு பெரிய பொருளாதார நசுக்கலுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும். உலக ஏகாதிபத்திய நாடுகள் எமது பொருளாதாரத்தை நசுக்குவதற்கான முயற்சிகளில் முற்று முழுதாக முயலும். சோவியத் யூனியனின் புரட்சிக்குப் பின்னர் தனியார் சொத்துக்களை முற்று முழுதாக தேசியமயப்படுத்த முயன்ற போது, முதலாளிகள் திட்டம் போட்டு சூழ்ச்சி செய்து பொருளாதார உற்பத்தியை குறைத்ததும், பட்டினிச்சாவும் உணவுப்பற்றுக் குறைவும் ஏற்பட்டதும், அந்நிய நாடுகளின் போர் ஆபத்து வந்ததும் காணக்கூடியதாகின்றது. பின்னர் தனியார் துறையை அனுமதிப்பதுடன் சோசலிச பொருளாதார அமைப்பை வளர்த்தெடுத்து தனியார் துறையை படிப்படியாக உடைத்ததை காணக்கூடியதாடிகன்றது. இன்று ஒரு சமூகவிரோதி கடத்தல், விபச்சாரம், கள்ளச்சாராயம் போன்றவற்றால் அரசாங்கத்தின் அனைத்துச் சட்டங்களையும் மீறி பணக்காரனாகி தேர்தல் வரும்போது அப்பணத்தை செலவு செய்து ஆட்சிக்கு வரும் பொழுது அவரால் தனது வர்க்க

நலன்களைப்பாதுகாக்கும் முதலாளித்துவ ஜனநாயகத்தை த்தான் நிலைநாட்ட முடியும்.

தொழிலாளர், விவசாய, மகளிர் அமைப்புகளுக்கூடாக அணிதிரட்டப்பட்டு, அவற்றிற்கூடாக தெரிவு செய்யப்படு பவர்கள் நாட்டின் நிர்வாகத்தை பொறுப்பேற்றுக் கொள்ளும் போதே மக்கள் ஜனநாயகம் சாத்தியமாகும்.

## (5) சிங்கள மக்கள் மேல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் —.

தமிழ்மக்களின் போராட்டம் ஒரு தேசிய இன ப்போராட்டம். தேசிய இனப்பிரச்சனைகளின் வெளிப்ப பாடு என்பதை திசைதிருப்புவதற்கான முயற்சிதான் சி ங்கள மக்கள் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள். தொ டக்க காலத்தில் அகிம்சை போராட்டங்கள் நடந்தபோ ம் இனக்கலவரங்கள் உருவாக்கப்பட்டது. இனக்கலவரங் களின் போது தனிப்பட்டவர்கள் மட்டும் கொலைசெய் யப்படவில்லை, தனிப்பட்ட சொத்துக்கள் மட்டும் கொள் ளையிடப்பட்டு எரிக்கப்படவில்லை இந்துமதக் கோவில்கள் கிறிஸ்தவமதக் கோவில்கள், முஸ்லீம் பள்ளிவாசல்கள் என்பனவும் கொள்ளையிடப்பட்டு எரிக்கப்பட்டன. தமி ழ்மக்களின் போராட்டங்கள் பெளத்த மதத்திற்கு எதி ரான போராட்டம் என்பதனை உலக நாடுகளுக்கு கா ட்டுவதற்காக சிங்கள அரசாங்கங்கள் இவற்றை திட்ட மிட்டு மேற்கொண்டன. இது ஒரு மதப்பிரச்சனை இதை த் தீர்த்தால், தேசிய இனங்களிடையே பிரச்சனைகள் வேறென்றும் இல்லை என்று உலக நாடுகளின் கவனத்தை திசை திருப்புவதற்கு சிங்கள அரசாங்கங்கள் முயற்சி எடுத்து தோல்வி கண்டன.

இன்று தமிழ்மக்களின் தேசிய விடுதலைப்போராட்டம் முதலாளித்துவத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான நிரந்தரப் போராட்டமாக மாற்றமடைந்து கொண்டிருக்கின்றது. இதன் வளர்ச்சிப்போக்கில் இதனால் வரும் ஆபத்து இலங்கை அரசாங்கத்திற்கு மட்டுமல்ல ஏகாதிபத்திய நாடுகளுக்கும் சேர்த்ததே. இந்நிலையில் இவ் ஆயுதப் போராட்டத்தை திசை திருப்ப வேண்டிய தேவை முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளுக்கு ஏற்படுகின்றது. சிங்களவர்கள் தமிழர்களைக் கொலை செய்யும், தமிழர்கள் சிங்களவர்களை கொலை செய்யும் ஒரு இனப்போராட்டமாக இதை மாற்றுவதன் மூலம் திசை திருப்ப முயற்சி எடுக்கப்பட்டது. சிங்கள மக்கள்மேல் தாக்குதல்களை மேற்கொண்டு சில விடுதலை இயக்கங்களும் இதற்கு துணை நின்றன. ஏகாதிபத்திய ஊடுருவலுக்கு பலியாகின இந்த ரீதியிலான சிங்கள மக்கள்மேல் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தமிழ்மக்களின் போராட்டத்தை இனப்போராட்டம் என காட்டி உலக நாடுகளை திசை திருப்ப எடுக்கும் முயற்சிகளுக்கு துணைநின்று தமிழ்மக்களின் விடுதலையை பின்னடையவே செய்யும். தவறான போராட்டங்களும் ஏகாதிபத்திய ஊடுருவலுக்கு இடம் அளிப்பதும் ஒருபோதும் தமிழ்மக்களின் விடுதலையை வென்றெடுக்க துணை நிற்கமாட்டாது. முற்றுமுழுதான திசைமாற்றத்தையே ஏற்படுத்தும்.

தற்போது நடைபெறும் பேச்சுவார்த்தை தவறான போராட்டங்களால் வந்த பிரச்சனைகளைத்தீர்க்கும் முயற்சிகளாகவே காணப்படுகின்றது. 83ம் ஆண்டு போராளிகள் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள் என்பதை விடுத்து 83ம் ஆண்மல் ஆயுதம் ஏந்தியதால் ஏற்பட்டபிரச்

ச னைக ளை ( இராணுவம் குவிக்கப்பட்டது , கடல்கண்காணிப்பு வ லையம், இளைஞர்கள் கைது செய்யப்பட்டது , அப்பாவி மக்கள் கொ லை செய்யப்பட்டது , தாக்கப்பட்டது , தமிழ் குடியேற்றங்க ளை அகற்றி சிங்கள குடியேற்றங்க ளை மே ற் கொண்டது . ) தீர்க்கும் கண்ணோட்டமே காணப்படுகின் றது . தமிழீழத்தை வென்றெடுக்க ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்த போராளிகள் தவறான போராட்டங்களால் திசை மாற்றம் அடைந்திருக்கின்றார்கள் .

தெரிந்தோ தெரியாமலோ ஏகாதிபத்தி ய வழிநடத்தலுக்குட்பட்டு சிங்கள மக்கள்மேல் மேற்கொ ள்ளப்பட்ட தாக்குதல்க ளை இத னைமேற்கொண்ட இயக்க ங்கள் நிறுத்துவது தமிழீழவிடுத லைப்போராட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு சர்வதேச ரீதியிலான நட் புச் சக்திக ளை வென்றெடுப்பதற்கு வகைசெய்யும் .

## ( 6 ) தமிழீழத்தில் எப்படி சமூக மாற்றத்தை ஏற்படுத்துவது ?

எங்களுடைய கல்வி முறை மாற்றி அமைக்க ப்பட வேண்டும் . எங்கள் நாட்டிற்கு பிரயோசனப்படக் கூடிய முறையில் எமது தொழில் கல்வி முறையை மாற்றி அமைக்க வேண்டும் . இலங்கைத்தீவு முழுமையையும் பொறு த்த வரையில் வெளிநாட்டு நிறுவனங்களால் நாட்டின் வளங்கள் சுரண்டப்படுவது தொடர்கின்றது . ஏகாதிபத் திய நாடுகள் மூன்றும் மண்டல நாடுகளில் இருந்து மூல வளங்களுடன் மூ ளைசாலிக ளையும் ( வைத்தியர்கள் , பொறி யிலாளர்கள் , தொழில் நுட்பவல்லுனர்கள் ) மலிவாக இற க்குமதி செய்வதில் முன் நிற்கின்றன . எமது மூலவளங்கள்

மட்டுமல்ல, மூலவளங்களும் வெளிநாடுகளை வளம்படுத்த வேலை போகின்றது. இந்நிலையை மாற்றி தமிழீழத்தின் வளங்களுக்கேட்ப கல்வி முறையை மாற்றி அமைக்க வேண்டும். மீன்பிடி விவசாயம் குடிசைக்கைத்தொழில் ஆகியவற்றை ஊக்குவிக்கவேண்டும். இது பொருளாதார அடிப்படையில் அமையவேண்டும்.

## மக்கள் அமைப்புக்கள்--.

மக்கள் அமைப்புக்களை நாங்கள் ஒரு நாளில் கட்டி எழுப்பிவிட முடியாது. கடந்தகாலங்களில் நாங்கள் எடுத்த முயற்சிகளில் பாரிய அளவு வெற்றிகள் பெற்றிருக்கின்றோம். மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற இடங்களில் தொடர்ந்தும் மக்கள் அமைப்புக்களுக்கான வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றோம். யாழ்ப்பாணத்திலே வாழும் மக்களைப் பொறுத்தவரையில் முற்று முழுதாக நிரந்தரமாக வென்றெடுக்ககூடிய நிலையில் இல்லை. இன்றைய அதிர்வுகளுக்கு நேரடியாக முகம் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கும் அவர்கள் தாக்குதல்நடவடிக்கைகளில் ஈடுபடுவதை வரவேற்பார்கள். விவசாய சங்கங்கள் இறுக்கமாக கட்டப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. மாணவர் மகளிர் அமைப்புக்களும் விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றது. தொழிற்சங்கங்களை வளர்த்தெடுத்திருக்கின்றோம். கூட்டுறவுசங்கங்களிலும் படிப்படியாக ஊடுருவியிருக்கின்றோம். இவ்வமைப்புக்களில் நிர்வாகத்தை பொறுப்பேற்க கூடிய அளவில் வலிமையான அமைப்புக்களும் இருக்கின்றன. இவற்றை ஒரு நாளில் செய்து முடித்துவிட முடியாது. இது ஒரு நீண்டகாலப் போராட்டம். எங்களுடைய மிகக்குறைந்த

போராட்டகாலத்தில் குறிப்பிட்ட அளவு சாதித்திருக்கின்றோம். எதிர்காலத்தைப்பற்றிய நடவடிக்கைகளில் நம்பிக்கையுடனும், உறுதியுடனும் இருக்கின்றோம்.

## பலஸ்தீனிய விடுதலைப் போராட்டம்.

விடுதலைப்போராட்ட வரலாறுகளில் மிகக்கஸ்டப்பட்டு நீண்டகாலமாக பலஸ்தீனிய போராளிகள் போராடுகின்றார்கள். ஆனாலும் இவர்களது போராட்டம் இன்றைக்கு வெற்றிபெற முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது. தொடக்ககாலத்தில் அவர்கள் மேற்கொண்ட மிகத்தவறான போராட்டங்களும் இவர்களது இன்றைய பின்னடைவுக்கு காரணமாகின்றது.

மக்களை முழுமையாக அரசியல்மயப்படுத்தாமலும், அமைப்புரீதியாக வளர்த்தெடுக்காமலும் ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டு கொதிப்படைந்து சில குழுக்களாக சேர்ந்து சில தாக்குதல்களை மேற்கொண்டார்கள். யூதமக்களை தங்களது போராட்டத்தின்பக்கம் வென்றெடுக்க முயற்சிக்காமல் யூதமக்கள்மேலும் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதன் விளைவுகளாக இஸ்ரேலிய அரசாங்கம் பலஸ்தீனிய கிராமங்களில் குண்டுமாரிபொழிந்து அவர்களை அகதிகளாக வெளியேற்றியது. தங்களுடைய அன்றாட வாழ்விற்காக மத்திய கிழக்கில் அரபுநாடுகள் அனைத்திலும் சிதறல், சிதறல்களாக குடியேறினார்கள். குடியேறிய நாடுகளின் வர்க்கநலன்களை பாதிக்காத வகையில் இவர்களது போராட்ட நடவடிக்கைகளைஅந்த நாடுகள் கட்டுப்படுத்தின.

இன்றைய நிலையில் பின்தளத்தில் இருந்து கொண்டு மக்களை அரசியல் மயப்படுத்த முடியாதநிலையிலும் தயார்படுத்த முடியாத இக்கட்டான நிலையிலும் இருக்கின்றார்கள்.

இவர்களது தொடக்ககால போராட்டங்கள் இன்றைய பின்னடைவுகளுக்கு முக்கிய காரணமாகின்றது. பழிவாங்கும் நடவடிக்கைகள் கறுப்பு செப்படம்பர் (BLACK SEPTEMPER! ) போன்ற குழுக்களால் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்டன. இன்று BLACK SEPTEMPER ல் ஒரு உறுப்பினர் கூட இல்லை. அவர்களில் இருபது பேரோ நாற்பது பேரோ அல்லது இருநூறு பேரோ அழிந்திருக்கலாம். வீரவரலாறு படைத்திருக்கலாம். ஆனால் அவர்களின் வீரவரலாறு பலஸ்தீனிய மக்களுக்கு ஒரு நாட்டை படைத்ததா? அல்லது அவர்களுடைய சமுதாயத்தை வாழவைத்ததா? மாறாக பாரிய நெருக்கடிகளை தோற்றுவித்திருக்கின்றது.

பலஸ்தீனிய விடுதலை இயக்கத்துடன் கழகம் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்தியிருக்கின்றது. பல சந்தர்ப்பங்களில் அவர்கள் எங்களுக்கு துணையாக நின்றார்கள். நாங்கள் அவர்களுக்கு துணையாக நின்றோம். அவர்களின் போராட்டங்களை நியாயப்படுத்தி அறிக்கைகள் விடுகின்றோம். இன்னும் எங்கள் தோழர்கள் அவர்களுடன் சேர்ந்து போராடுகிறார்கள். பலஸ்தீனியர்களின் எதிரியும் தமிழ்மக்களின் எதிரியும் ஒன்றாக இருப்பதால் எதிர்காலத்தில் எங்கள் தொடர்புகள் இன்னும் நெருக்கமாகும்.

# பெண்களின் விடுதலை

பெண் அடிமைத்தனம் வர்க்கங்களினால் தொழிலாளர் வர்க்கம் நசுக்கப்படும் முன்பிருந்தே தொடர்ந்து வந்துள்ளது. மதநம்பிக்கைகள், மூடநம்பிக்கைகள் மக்கள் மத்தியில் பரவுமுன்பிருந்தே பெண் அடிமைத்தனம் இருந்துள்ளது. இது நீண்ட நெடுங்காலமாக மக்கள் மத்தியில் ஆழ்ந்து பதியப்பட்ட நிலையில் இருக்கின்றபடியால், விடுதலை பெற்ற மறுநாளே பெண் அடிமைத்தனம் நீங்கிவிடும் என்று நினைக்கக்கூடாது.

அண்மைக்காலங்களில் எழுந்த இந்த தேசிய இனப்பிரச்சனை உடனடியாக தீர்க்கப்படவேண்டியுள்ளது. இதை தீர்ப்பதன்பின் நாம் அடுத்த போராட்டத்திற்கு போகலாம். இனவாத பாசிச அரசினது நசுக்கல் தூக்கி எறியப்படும் நிலை உண்டாகிய அதே நேரத்தில் மற்றவைக்கான அடித்தளங்களை நாம் அமைக்கவேண்டும் பெண் அடிமைத்தனம், சாதிசமய அடிப்படையில் நசுக்கப்படுபவர்களுக்கு ஒரு உத்தரவாதம் இருக்கவேண்டும். தங்களுக்கு விடுதலைக்குப்பின் சம உரிமை கிடைக்கும் என்று நம்பிக்கை வைப்பதன் மூலமும், பெண்கள் தங்களுக்கு என்ற மகளிர் அமைப்பை உருவாக்கி பெண்களை அணிதிரட்டி அவர்களுக்கு முற்போக்கான கொள்கைகளை எடுத்து கூறுவதன் மூலமும் தமது விடுதலைக்கு இன்றிருந்தே பாதை அமைக்கலாம்.

கடந்த காலங்களிலும், இன்றும் பெண்கள் ஒடுக்கப்பட்டுக்கொண்டே வந்துள்ளார்கள். அவர்கள் எந்தெந்த ரீதியில் ஒடுக்கப்பட்டுள்ளார்கள் என்று அவர்க

ளை புரிந்துகொண்டு அதற்கு எதிராகப் போராட்டத்தை நடத்துவதற்கு அணிதிரள வேண்டும். குறிப்பாக சில முக்கிய காரணங்களை புரிந்து கொள்ளவேண்டும்.

இன்றும் தம்மைத்தாமே தாழ்த்திக் கொள்ளும் நிலைமை அகலவேண்டும்.

மூடநம்பிக்கையில் மழுங்கடிக்கப்பட்டவர்கள் இதிலிருந்து விடுபட வேண்டும்.

ஆண்வர்க்கத்திடமிருந்து விடுதலை பெற வேண்டும்.

பெண்களது உழைப்பு சுரண்டப்படாமல் இருக்கவேண்டும்.

பெண்களை கவர்ச்சிப்பொருளாக பாவிப்பதை தவிர்க்க வேண்டும்.

இந்த அடிப்படையில் பெண்களை அணிதிரட்ட வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தில் பெண்களின் உழைப்பு இதுவரை காலமும் கணக்கெடுக்கப்படவில்லை. காரணம் அவர்களின் வேலை வீட்டுக்கு உழைப்பதற்குள்ளேயே அடங்கிவிடுகின்றது, அதிகமாக அவர்களின் உழைப்பு சமையல், குழந்தை பராமரிப்பு, மற்றும் வீட்டின் அன்றாட வேலைகளை கவனித்ததால் அவர்களின் வேலை நாட்டின் பொருளாதார உற்பத்தியில் கணக்கெடுக்கப்படவில்லை. ஆனால் இது கட்டாயம் கணக்கெடுக்கப்படவேண்டியதொன்று. இந்த வேலை ஆண்களுக்கோ அல்லது பெண்களுக்கோ என்று ஒதுக்கப்பட்டதல்ல. கடந்தகாலங்களில் பொருளாதார ரீதியில் நசுக்கப்பட்ட பெண்கள் அன்றாடம் வீட்டு வேலை செய்வதும், அவர்கள் அதிலிருந்து வெளியேறாமல் இருக்கும் நிலைமையையும், அவர்கள்

இந்த தொழிலுக்கே படைக்கப்பட்டவர்கள் என்றும் இது கிட்டத்தட்ட அடிமைத்தொழில்மாதிரி நசுக்கப்பட்ட நிலைமையையும் உருவாக்கிவிட்டது. அவர்களுக்குப்பின்பு வேலைவாய்ப்பு கிடைத்தபோது, வீட்டு வேலையையும் அவர்கள்தான் செய்தார்களே தவிர அந்த வேலை அவர்களுக்கு புறம்பானது என்று யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆண்களும் அவர்களுக்கு சமபங்கு அளிக்கவேண்டும் என்பதை கடந்தகாலங்களில் மிகவும் குறைவானவர்களே சிந்தித்தார்கள்.

பொருளாதார நெருக்கடி கூடுதலாகப்போகப்போக அவர்களது அடிமைத்தனம் அவர்களை விலைக்கு வாங்குவது என்ற நிலைமைக்குத்தள்ளிக்கொண்டுபோய் அவர்களை கவர்ச்சிப்பொருளாக பயன்படுத்தும் நிலைமைக்குத்தள்ளியது. இந்நிலைமையை மாற்றி இந்நாட்டின் உற்பத்தியில் சமபங்கு இருக்கின்றது என்பதை உணர்த்துவதன் மூலம் தான் பெண் அடிமைத்தனத்தில் இருந்துவிடுதலை பெறச்செய்யலாம். எடுத்த உடனேயே நாளைக்கு தமிழீழத்தில் சமஉள பங்களிப்பு கிடைக்கும் என்று நினைக்ககூடாது.

அவர்கள் அமைப்பின் ஊடாக அணிதிரட்டப்பட்டு அவர்களின் குறைபாடுகளை தூக்கி எறிவதின் மூலமும், ஆண்வர்க்கத்தின் தவறான எண்ணங்களை தூக்கி எறியும் நிலைமையை உருவாக்க வேண்டும். இது ஒரு நாளில் அல்லது, ஆயுத முனையில் செய்யக்கூடியதல்ல. இது ஆண்களின் அடிமனதில் இருந்து வர்க்க வேறுபாடுகள் எப்படி தூக்கி எறியப்படவேண்டுமோ அப்படி தூக்கி எறியப்படவேண்டும்.

முதலாளித்துவ, தரகு முதலாளித்துவத்தை ஓர் அமைப்பு ரீதியிலான ஆயுதப்போராட்டம் மூலமே தூக்கி எறியமுடியும். வர்க்கங்களுக்குள் வர்க்க வேறுபாட்டை உடனடியாக களையமுடியாது. இது நீண்டகாலப்போராட்டமாக இருக்கும். ரஸ்ய விடுதலைக்குப்பின் லெனின் மாணவர்கள் மத்தியில் பேசும்போது, முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டத்தில் வெற்றிபெற்றோமே ஒழிய வர்க்கங்களுக்குள் இருக்கும் வேறுபாட்டை களைவதில் வெற்றிபெறவில்லை என்றார். மக்களின் அடிப்படை உரிமைகளை கொடுக்கின்ற அளவுக்கு பிரச்சாரம் செய்வதன் மூலந்தான் இவைகளை தூக்கி எறியலாம். ஆயுதப்போராட்டம் மூலம் முழுமையான வர்க்க வேறுபாட்டை எப்படி தூக்கி எறிய முடியாதோ அதேபோல்தான் பெண்அடிமைத்தனத்தையும் நினைத்தமாத்திரத்தில் தூக்கி எறியமுடியாது. ஏனெனில் அதன் மிச்சசொச்சங்கள் இருந்து கொண்டே இருக்கும்.

தோழர்களில் பலர் தமது சகோதரியையோ, தாய்மார்களையோ இயக்கங்களில் முன்வந்து வேலை செய்வதை தவிர்க்கின்ற நிலைமையில் இருக்கின்றார்கள். சமுதாயம் தவறாக எண்ணிவிடும் என்ற நிலைமையுடன் தெளிவில்லாமல் இருக்கும் நிலைமையை குறைந்த பட்சம் கழகத்தில் இருப்பவர்கள் இதைப்புரிந்து கொண்டு தூக்கி எறிந்தால்தான், இதை நாட்டு மக்கள் மத்தியில் கொண்டு செல்லலாம்.

அத்தோடு சில அமைப்புக்களில் ஒரு சில பெண்கள் முற்போக்கானவர்களாக வந்துவிட்டார்கள்என்பதற்காக நாட்டில் உள்ள அத்தனை பெண்களும் முற்போ-

-க்காணவர்கள் என்று சொல்லிவிட முடியாது. அவர்கள் சமுதாயத்தை விட்டுவிட்டு வெளியே வருவதன் மூலம் இன்னும் ஒரு விதத்தில் அவர்கள் சமுதாயத்தில் இருந்து புறக்கணிக்கப்படலாம். ஏனெனில் பிற்போக்கான பெண்கள் அதிகமாக இருக்கும்போது முற்போக்கான ஒரு சிலபேர் இருந்து பிரயோசனமில்லை. பெண்களை முழு-மையாக அணிதிரட்டி அவர்களின் பிற்போக்குத்தனத்தை களைந்தெறிந்து முன்னேற்ற வேண்டும். மகளிர் அமைப்புக்களை உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்களுடைய பிரச்சனையை தீர்க்க அதற்கூடாக அணிதிரட்ட வேண்டும்.

கழகத்தில் மகளிருக்கு சமபங்கு அளிக்கப்பட்டுள்ளது. மகளிர் முழுமையாக வராதகாரணத்தால், அவர்களுக்கு என்று ஓர் அமைப்பை, அதாவது மகளிர் அமைப்பு கட்டப்பட்டது. இந்தச்சந்தர்ப்பத்தை நழுவவிடாது விடுதலைக்காக பயன்படுத்த வேண்டும். இன்று எதிரிபலம் வாய்ந்தவன், அவனை எதிர்த்துப்போராட மகளிரும் சேர்ந்து போராட வேண்டிய இச்சந்தர்ப்பத்தில், தங்கள் ஒடுக்கு முறைக்கும் எதிராகப் போராட முடியும். இதனால் அவர்கள் நாளைய ஆட்சியில் சமபங்கு பெறக்கூடிய நிலைமையை உருவாக்க முடியும்.


---

## 72 ம் பக்க தொடர்ச்சி:-

மேலை நாடுகளில் குந்திக் கொண்டு செயலற்றிருக்கும் இந்த தமிழ் குழுக்கள் தமது குறிக்கோளை சாதித்துக் கொள்ள உதவி செய்ததாக ஆகிவிடும்.

(இக்கட்டுரை 8.9.85. ஜனசக்தி இதழில் பிரசுரமானது)

# — தென்னாபிரிக்க மக்கள் மீதான அடக்குமுறையும் அவர்களது போராட்டமும் —




இனவெறித் தென்னாபிரிக்காவில் வெள்ளையரல்லோதாருக்கெதிரான அடக்குமுறை சமீபகாலங்களில் சகிக்கமுடியாத அளவு அதிகரித்ததைத் தொடர்ந்து, கறுப்பு இன மக்கள், அரசின் பொலீசிற்கும், இராணுவத்திற்கும் எதிராக தென்னாபிரிக்க தெருக்களில் கிளர்ந்தெழுந்தனர். யூலை 21ல் இருந்து பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் இராணுவச் சட்டத்தை முறியடித்து நிறவெறி அரசைத் தோற்கடிக்க அவர்கள் போர் முனைப்புக் கொண்டுள்ளனர். சமீபத்தில் ஆபிரிக்க மக்களின் விடுதலை இயக்கமான ஆபிரிக்க தேசியக்காங்கிரஸ் ( A.N.C ) வெளியிட்டுள்ள அறிக்கை, " தென்னாபிரிக்கா ஆட்சி செய்யப்பட முடியாத நிலையும், அப்பதையிட் (APARTHEID)

நடைமுறைப்படுத்தப்பட முடியாத நிலையும் விரைவுபடுத்தப்படும் ஏனெனில் அப்பதையிட் (APARTHEID) சகிக்க முடியாத அளவு மோசமாகியிருக்கின்றது" என்று வெளிப்படுத்துகின்றது. தென்னபிரிக்க வெள்ளையின சிறுபான்மை அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் இன, நிறவெறி சட்டங்களுக்கு அடித்தளம் 19ம் நூற்றாண்டிலேயே அமைக்கப்பட்டு விட்டது. வெள்ளை இனத்தவர்கள் உயர்ந்தவர்கள் என்ற தவறான விஞ்ஞான கண்டுபிடிப்புத் தத்துவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இவ் அடக்குமுறைச்சட்டங்களுக்கு அடித்தளம் உருவாக்கப்பட்டது. இச்சட்டங்களின் முக்கிய நோக்கம் கறுப்பு இன மக்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கும் வெள்ளை இனத்தவரின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதாகும்.

1948ல் ஆட்சிக்கு வந்த தேசியக்கட்சி (NATIONAL PARTY) கறுப்பு இனத்தவர் மீதான நடைமுறையிலிருந்து வந்த இவ்வடக்குமுறையை சட்டபூர்வமாக்கியதுடன் அதற்கு (APARTHEID) என்று பெயரிட்டது. நீண்டகாலத்திற்கு முன்னர் ஆபிரிக்காவில் குடியேறிய ஒல்லாந்தரின் வழித்தோன்றல்களான ஆபிரிக்கானர் (AFRIKANERS) மொழியில் 'அப்பதையிட்' என்பது பிரிந்திருத்தல் என்று பொருள்படும். இந்த அரச அமைப்பு முறையில் ஆபிரிக்காவின் வேறுபட்ட நிற இனங்கள் தனித்தனியே பிரிந்திருப்பதுடன் தனித்தனியே தங்களை வளம்படுத்துதலும் சட்டமாக்கப்பட்டுள்ளது.

தென்னபிரிக்காவின் முழுச்சனத்தொகையும் இனரீதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வெள்ளையர்கள், கறுப்பர்கள், இந்தியர்கள் என அவர்களின் நிற அடிப்படையில் இது மேற்கொள்ளப்பட்டு ஒவ்வொருவருக்கும் அடையாள அட்டைகள் வளங்கப்பட்டிருக்கின்றது.

இன ரீதியான ஒடுக்கு முறை தென் ஆபிரிக்கமக்களின் வாழ்க்கையில் அத்தனை மட்டங்களிலும் நடைமுறைப்படுத் தப்பட்டிருக்கின்றது. கறுப்பு இன மக்கள் தாங்கள் வாழ் வதற்கு என நாட்டின் ஒரு பகுதியிலும் இவர்கள் தேர்ந் தெடுக்க முடியாது. அரசினால் ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட பகுதிகளில் மட்டுமே வாழலாம். வெள்ளையர்களுடன் ஒரே கூரையின் கீழ் வாழ்வதும் தடைசெய்யப்பட்டிருக்கின்றது. வெள்ளையர்களுக்கும், கறுப்பர்களுக்குமிடையிலான இடை வெளியை மீண்டும் விரிவுபடுத்தச் செய்யும் வகையில் தேசியக் கட்சி அரசாங்கத்தினால் கறுப்பர்களுக்கெனசில இடங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டு அவர்களுக்கு 'சுத ந்திரம்' வழங்கப்பட்டிருக்கின்றது. பன்ருஸ்ரான் (BANT USTAN) என அழைக்கப்படும் இவ்விடங்களுள் வாழும் கறு ப்பர்கள் தென்னாபிரிக்க குடியுரிமையை இழப்பதுடன், அவர்கள் வாழும் பகுதிகளுக்கு வெளியே "வெளிநாட்டு காரர்கள்" எனக்கணிக்கப்படுகின்றனர்.

வெள்ளையர்களின் இரத்தத்தின் புனிதத்தன்மை யை பாதுகாப்பதற்காக இந்நடவடிக்கைகளை மேற் கொள்ளுவதாக தென்னாபிரிக்க நிறவெறி அரசாங்கம் கூறினாலும், கறுப்பு இன மக்களை முதுகொடிய அடிமை வேலைக்குட்படுத்தி குறிப்பிட்ட வெள்ளையரின் வசதிக ளை பாதுகாப்பதே முக்கிய நோக்கமாகும். விவசாயம் செய்யக்கூடிய நிலங்களை பங்கிடுவதில் தென்னாபிரிக்கா வின் பெரும்பான்மையின கறுப்பர் பாரிய அளவில் பா திக்கப்பட்டிருக்கின்றனர். பலாத்காரமாக நகர்ப்புறங் களிலும், கழிவு நிலங்களிலும் குடியேற்றப்பட்டுள்ளனர். நாட்டின் மொத்த சனத்தொகையில் 1.5 வீதமான வெள்ளையர்கள் 87 வீதமாக நிலங்களுக்கு உரிமையா

ளர்களாகும் போது, 73 வீதமான கறுப்பர்கள் 13 வீத மான நிலங்களுக்கு உரிமையாளர்களாகின்றனர்.

மனிதநாகரீகத்திற்கப்பாட்பட்ட வகையில் கறு ப்பர்களை காலம் காலமாக அடக்கமுடியுமென நம்பும் தென்னாபிரிக்க இனவெறியர்கள், அதனை நிறைவேற்றுவதற்கு ஆயுதபலத்தை நம்பியிருப்பதுடன், கறுப்பு இன மக்களை கல்வியறிவற்ற பின்தங்கிய சமூகமாக்குவதில் வெற்றிகண்டி ருக்கின்றனர்.

தென்னாபிரிக்க அரசாங்கம் உருவாக்க முய ன்ற புதிய அரசியல் சட்டம் "மூன்று அறைப் பாராளுமன்றங்களை" உருவாக்குவதாகும். வெள்ளையர்கள், கறுப்பர்கள், இந்தியர் என்று மூன்று இன மக்களின் பிரதிநிதிகளுக்கு வெவ்வேறு அறைகளுடன் கூடிய பாராளுமன்றத்தை உருவாக்குவதாகும். முதல் தடவையாக கறுப்பர்களுக்கும் இந்தியர்களுக்கும் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் கொடுப்பதுபற்றி கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனாலும் இது நடைமுறைக்கு சாத்தியமற்றதாகவே காணப்பட்டது. ஏனெனில் வெள்ளையர்களிலும்பார்க்க மிகக்குறைந்த இடங்களே ஒதுக்கப்பட்டிருந்தது. தேர்தலில் வெற்றி பெற்றாலும் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிப்பதற்கு முன்னர் ஜனாதிபதியின் அங்கீகாரம் தேவைப்பட்டது.

நாட்டின் 23 கோடி ஆபிரிக்கர்களுக்கும் அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டு நிர்வாகத்திலிருந்து ஒதுக்கப்பட்டதற்கு நட்டஈடாக கறுப்பர்கள்வாழும் பகுதிகளில் மட்டும் உள்ளூராட்சி தேர்தல்களில் பங்குபற்றும் அதிகாரம் வழங்கப்பட்டது.

மூன்று அறைப்பாராளுமன்றத் தேர்தல்களை நிராகரிக்கும்படியான ஜனநாய ஐக்கிய முன்னணியின் கோரிக்கையை பெரும்பான்மை தென் ஆபிரிக்க மக்கள்மத்தியில் வெற்றி பெற்றது. ஆபிரிக்க நிறவெறி அரசாங்கத்தை ஜனநாயக ஐக்கிய முன்னணித்தலைவர்கள் தலைவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கத்தூண்டியது. பல தலைவர்கள் கைது செய்யப்பட்டு சதி பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என குற்றம் சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்டாலும் ஜனநாயக ஐக்கிய முன்னணி மக்கள் மத்தியில் வேரூன்றி வளர்கின்றது.

இன்னும் நடைமுறைக்கு கொண்டுவரப்படாத இவ்வரசியல் சட்டத்திற்கெதிராகவும், முழுமையான நிறவெறி அமைப்புக்கெதிராகவும் சமீபகாலங்களில் ஆபிரிக்க மக்களின் போராட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களில் நாட்டின் எல்லாப்பகுதிகளுக்கும் போராட்ட நடவடிக்கைகள் பரவலாகி நாட்டின் 46,000 பொலிசாரினாலும் அடக்கமுடியாத நிலையில் இராணுவம் உதவிக்கழைக்கப்பட்டு நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

இங்கேயும் வழக்கம்போல் அடக்குமுறையாளர்கள் தோல்வியையே தழுவினர். அப்பாவிமக்களை சுட்டுக்கொல்வதில் இவர்கள் வெற்றியடையும்பொழுது இவர்களுக்கெதிரான விடுதலைப்போராளிகளின் இராணுவ நடவடிக்கைகள் அதிகரித்திருக்கின்றன. வெள்ளை நிற மாணவர்களுக்காக வேறான கல்வித்திட்டத்தை வகுத்திருப்பதுடன் அக்கல்வித்திட்டத்தை பயிலவோ அல்லது பள்ளிக்கூடங்களில் சேரவோ கறுப்பு இனத்தவர்க

ளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் ஒரு கறுப்பு ஏன மாணவனுக்கு செலவு செய்வதிலும் எட்டுமடங்கான தொகையை வெள்ளை இன மாணவனுக்கு செலவு செய்கின்றது.

இவ்வடக்கு முறைகளுக்கெதிரான கறுப்பு இன மக்களின் போராட்டம் முதன் முதலில் 1960ம் ஆண்டுசார்புவில் ((SHARPEVILLE) ) என்ற நகரத்தில் நடத்தப்பட்ட ஆர்பாட்டத்துடன் ஆரம்பமானது. இப்போராட்டம் மிருகத்தனமாக அடக்கியொடுக்கப்பட்டது. ஆர்பாட்டக்காரர்கள் பொலீசாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் தென்னாபிரிக்க அரசாங்கம் இதை ஒரு வெற்றியாகக் கொண்டாட முடியாதளவிற்கு எச்சரிக்கையானது. போராட்டத்தை முன்னெடுத்த இதே வருடத்தில் தென்னாபிரிக்க கறுப்பு இன மக்களின் விடுதலை ஸ்தாபனம் ஆபிரிக்கத் தேசியக்காங்கிரஸ் ( A.N.C ) தடைசெய்யப்பட்டது சாத்வீக முறைகளினால் ஆபிரிக்ககறுப்பு இன மக்களின்உரிமைகள் வென்றெடுக்கப்படமுடியாது எனக்கருதிய ஆபிரிக்க தேசியக்காங்கிரஸ் "UMKHONTO WE SIZWE" என்ற இராணுவ அமைப்பைத் தோற்றுவித்தது. 1964ல் ஆபிரிக்க தேசியக்காங்கிரஸ் தலைவர்களான நெல்சன் மண்டேலா ( NELSON MANDELA )வால்டர் சிசுலு ( WALTERSISULU ) ஆகிய தலைவர்கள் தென்னாபிரிக்க நிற வெறி அரசினால் கைது செய்யப்பட்டு ஆயுள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டனர். இந்நடவடிக்கைகள் நிறவெறிக்கெதிராக மதகுருமாரையும் அணிதிரட்டியது.

ஆபிரிக்க தேசியக்காங்கிரஸ் கறுப்புஇன மக்களின் மீதான நிறவெறி அடக்கு முறையை முறியடித்து தெற்கு ஆபிரிக்காவின் எல்லா இன மக்களும் சம உரிமை

உடன் வாழ்வதற்கான அரசை நிறுவுவதற்காக போரா டிக் கொண்டிருக்கின்றது. இதை தனது வேலைத்திட்டத்தில் பிரகடனப்படுத்தியிருக்கும் ஆபிரிக்க தேசியக்காங்கிரசை நிறவெறிக்கெதிராக போராடும் பல ஸ்தாபனங்கள் அங்கீகரித்திருக்கின்றன. இரண்டுகோடிப் பேருக்குமேல் அங்கத்துவம் வகுக்கும் "ஜனநாயக ஐக்கிய முன்னணி"யும் ( U.D.F ) அங்கீகரித்திருக்கின்றது.

ஜனநாயக ஐக்கிய முன்னணி ( U.D.F ) 1983ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தென் ஆபிரிக்க இன வெறி அரசாங்கம் அறிமுகப்படுத்திய புதிய அரசியல் சட்டமொன்றிற்கு எதிரான இயக்கமாக இது உருவெடுத் தது.

எரிபொருள் சேமிப்பு நிலையங்கள், மின்சார உற்பத்தி நிலையங்கள் போன்ற நாட்டின் பொருளாதா ரத்தை சேதப்படுத்தும் வகையில் தாக்குதல்களை மேற் கொள்வதுடன், நிறவெறி அரசுடன் தொடர்புகளை வைத்தி ருக்கும் கருப்பர்களும் தாக்குதல்களுக்கு உட்படுகின்றனர். செப்படம்பர் 84ல் இருந்து 360 கறுப்பு பொலீஸ்கார ர்கள், 27 நகர பிதாக்கள் உட்பட 240 நகரசபை அங்கத்தவர்கள் மேல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டி ருக்கின்றன. வெள்ளை நிறவாத அரசாங்கத்துடன் ஒத்துழை க்கும் கறுப்பர்களின் வீடுகளும் கொழுத்தப்பட்டிருக்கின்றன. கடந்த வருடம் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட 38 நகரசபைகளில் 5 மட்டுமே மிஞ்சியிருக்கின்றது. கறுப்புஇன மக்களின் நகரசபைகளை நிராகரித்து சுதந்திரத்திற்கு விலையாக பாராளுமன்ற ஆசனங்களை கொடுக்கலாம் என்ற நிறவெறி அரசாங்கத்திற்கு தோல்வியையே தந்தி ருக்கின்றது.

இப்போராட்டத்தை முன்னெடுத்துள்ள ஆபிரிக்க தேசியக்காங்கிரசை பல ஆபிரிக்க நாடுகள் அங்கீகரித்திருப்பதுடன், சோவியத் யூனியன் இன்னும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இராணுவ உதவிகளை வழங்குகின்றன. சுவீடன், ஒல்லாந்து ஆகிய மேற்கு நாடுகள் கறுப்பு இன மக்கள் வாழும் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு நிதி உதவி வழங்குகின்றன.

தென்னாபிரிக்க அரசாங்கத்திற்கு, அதன் நிறவெறி கொள்கைகள் தோற்கடிக்கப்படாமல் இருப்பதற்கான முழுமுயற்சிகளையும் அமெரிக்க அரசாங்கம் மேற்கொள்கின்றது. முன்னைய அமெரிக்க ஜனாதிபதி காட்டர் ( CARTER ) நிர்வாகத்தால் விதிக்கப்பட்டிருந்த தொழில் நுட்ப, அணுசக்தி ஏற்றுமதி தடையை நீக்கியதுடன் றேகன் நிர்வாகம் பாரிய பொருளாதார, இராணுவ உதவிகளையும் தென்னாபிரிக்க அரசாங்கத்திற்கு வழங்குகின்றது. தென்னாபிரிக்காவின் தற்போதைய அரசாங்கம் தோற்கடிக்கப்படுவது. அமெரிக்காவிற்கு பின்வரும் இழப்புக்களை ஏற்படுத்துமென றேகனின் அரச துணைச்செயலாளர் கருதுகின்றார்.

(1) அமெரிக்க தொழிற்சாலைகளுக்கு தேவையான கனிப்பொருள்களின் இறக்குமதி தடைசெய்யப்படலாம். வருடாந்த அமெரிக்க தொழிற்சாலைகளுக்கு தேவையான மூன்றில் இரண்டு பங்கு பிளாற்றினம், அரைவாசி குரோமியம், மூன்றிலொரு பங்கு மக்னீசம் தென்னாபிரிக்காவில் இருந்தே இறக்குமதியாகின்றது. இதேயளவிலான கனிப்பொருட்களை ஏற்றுமதி செய்யக்கூடிய ஒரேநாடு சோவியத் யூனியனாகும்.

(2) தற்போது 90%மான எரிபொருள்கள் மேற்குநாடுகளுக்கு நன்நம்பிக்கை முனையினூடாக ஏற்றுமதியாகின்றன. ஒரு மார்க்சிச அரசாங்கம் அமைக்கப்பட்டால் சோவியத் யூனியன் இதைத்தடை செய்யலாம்.


(3) தற்போது இப்பிராந்தியத்தில் பல நாடுகளில் மார்க்சிச அரசாங்கம் இருப்பதால் தென்னாபிரிக்காவில் ஒரு மார்க்சிச அரசாங்கம் ஏற்படுவது இப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் நலன்களைப் பெரிதும் பாதிக்கும். அத்துடன் ஒரு நீண்ட போராட்டம் அமெரிக்க தொழிற்துறையையும் பாதிக்கும்.

அத்துடன் ஐக்கிய அமெரிக்கா 14பில்லியன் டொலர்களை தென்னாபிரிக்காவில் முதலிட்டிருப்பதோடு வருடாந்தம் 3,8 பில்லியன் டொலர் வர்த்தகத்தையும் நடத்துகின்றது.

இக்காரணங்கள் தென்னாபிரிக்க நிறவெறி அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கு அமெரிக்காவிற்கு கட்டாயம் ஆகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக்குழு கூட்டத்தில், தென்னாபிரிக்காவின் நிறவெறிக் கொள்கையைக்கண்டித்தும் அவசரகாலச்சட்டத்தை நீக்கும் படியும் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்போது. அமெரிக்க பிரதிநிதி வாக்களிப்பிற்கு சமூகமளிக்காததுடன் தென் ஆபிரிக்க அரசாங்கத்தின் மீதான பொருளாதாரத் தடையின் திருத்த மசோதாவை அமெரிக்கா, பிரிட்டன் அரசாங்கத்துடன் சேர்ந்து வீட்டோ அதிகாரத்தைப்பாவித்து ரத்து செய்ததின் மூலம் தென்னாபிரிக்க அரசாங்கத்தை இந்த தடவையும் காப்பாற்றியுள்ளது. பொருளாதாரத்தடைகளை தென்னாபிரிக்காமேல் விதிப்பது கறுப்பின மக்களையே பாதிக்கும் என்ற அமெரிக்க அரசாங்

கத்தின் நிலைப்பாட்டை தென்னாபிரிக்க நிறவெறி எதிர்ப்பாளரான பிசப் டெஸ்மண்ட் ( BISHOP DESMOND TUTU ) கண்டித்துள்ளார். தென்னாபிரிக்க மக்கள்பாதிக்கப்படுவார்கள் என்று கருத்து தெரிவிக்கும் அமெரிக்கா, போலந்திற்கும், நிக்கராகுவாவிற்கும் மேல் பொருளாதாரத்தடைகளை விதிக்கும் போது இப்படியானகருத்துக்களை ஏன் தெரிவிக்கவில்லை என்றும் கேட்டுள்ளார்.

அமெரிக்காவாலும் ஏனைய ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளாலும் பாதுகாக்கப்படும் தென்னாபிரிக்காவின் நிறவெறி அரசாங்கத்திற்கு எதிரான தென்னாபிரிக்க மக்களின் போராட்டங்கள் மேற்கு நாடுகளில் வாழும் மனிதாபிமானம்மிக்க மக்களால் ஆதரிக்கப்படுகின்றது. நிறவெறிக்கெதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் இவர்கள் மேற்கு நாடுகளில்மேற்கொள்ளுகின்றார்கள். நிறவெறி அரசாங்கத்தை உடைத்தெறியப்போராடும் தென் ஆபிரிக்க மக்களை எந்தச் சக்திகளாலும் தடுத்துவிட முடியாது.



# தமிழீழ விடுதலைப் போராட்டமும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அணுகுமுறையும்.

1833ம் ஆண்டு வரை மூன்று வெவ்வேறு இராச்சியங்களாக இலங்கையின் அரசு அமைப்புக்காணப்பட்டது. வடக்கே ஒரு சுதந்திர தமிழ் இராச்சியமும், மத்தியிலும் தெற்கிலும் இரு சுதந்திர சிங்கள இராச்சியங்களும் காணப்பட்டன. மத்தியில் இருந்த சிங்கள இராச்சியம் தமிழ்நாட்டு அரச திருமணத் தொடர்பு காணப்பட்டமையினால் அதன் இறுதி அரசனும் தமிழனாகவே இருந்தான்.

1833ல் பிரித்தானியரால் கைப்பற்றபட்டிருந்த இம் மூன்று இராச்சியங்களும் நிர்வாக வசதிக்காக ஒன்றிணைக்கப்பட்டு ஒரே விதமான ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. அன்றே நாம் எமது இறைமையை பூரணமாக இழந்தோம். பின்னர் பிரித்தானியர் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கும் வரை அரச ஆட்சி முறையில் படிப்படியான சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து பிரித்தானியப் பாராளுமன்ற முறையிலான ஒரு ஆட்சி முறையை வழங்கி 1948ல் சுதந்திரத்தையும் வழங்கினர்.

அக்காலத்தில் இலங்கையில் நிலமானிய அமைப்பு முறையும், முதலாளித்துவ அமைப்பின் ஆரம்பகட்டங்களும் காணப்பட்டன. இதைவிட மத்திய மலைநாட்டிலுள்ள தோட்டத்துறையில் ஒரு முதலாளித்துவ விவசாய அமைப்பு காணப்பட்டது. அக்காலத்தில் இலங்கையில் தொழிலாளர் வர்க்கம் எனும்போது பின்வருமாறு அமைந்து காணப்பட்டனர். அதில் ஒருவகையினர் தோட்டத் தொழிலாளர்கள்.

அதாவது இந்தியாவில் இருந்த தமிழர்கள் அடிமைகள்போல் கொண்டுவரப்பட்டு, மலைநாட்டில் காடுகள் அழிக்கப்பட்டு தேயிலை, கோப்பி, றப்பர், கொக்கோத்தோட்டங்கள் உருவாக்கப்பட்டு அம்மக்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படாமல், பட்டினியில் வாழவைத்துத் தோட்டத்தொழில் கூலி விவசாயத் தொழிலாளர்களாக ஆக்கப்பட்டிருந்தனர். இதன் மூலம் பிரித்தானிய முதலீடுகள் பெருகி ஒரு தோட்டத் தொழில் முதலாளிகள் வர்க்கம் உருவாகி இருந்தது. இத் தொழிலாளர்களுக்கு இன்றுவரையும் அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டே வருகின்றன.

மறுபக்கத்தில் நகர் புறங்களில் அதாவது கொழும்பையும் அதனை அண்டிய பிரதேச நகரங்களில் காணப்பட்ட தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களும், வர்த்தக நிலையங்களில் வேலைசெய்த தொழிலாளர்களும், அரசாங்கத் திணைக்களங்களில் வேலை செய்த தொழிலாளர்களுமாகிய ஒரு தொழிலாளர் வர்க்க அமைப்புக்காணப்பட்டது. தொழிற்துறையிலும் சிறு வர்த்தகத் துறையிலும் கொழும்பிலும் கொழும்பை அண்டிய பிரதேசங்களிலும் இந்தியத்தமிழர்களும் கேரள மலையாளிகளும்அதிக அளவில் பிரித்தானியரால் ஈடுபடுத்தப்பட்டனர். அதாவது தொழிற்சாலைகளிலும், வர்த்தக நிறுவனங்களிலும் வேலை செய்தனர். காலம் போகப் போக உள்ளூர் தொழிலாளருக்கான வேலை வாய்ப்புக் குறையவே வெளிநாட்டுத் தொழிலாளர் மேலான இன வெறுப்புணர்வு ஆரம்பிக்கத் தொடங்கியது.

இலங்கையில் தொழிலாளர்களின் நலவுரிமையைப் பாதுகாத்துக்கொள்ள முதன் முதலில் சேர் பொன்னம்

பலம் அருணசலம் என்ற தமிழரே இலங்கைத் தொழிலாள ர்களுக்காக முதன் முதலில் ஒரு தொழிற்சங்கத்தை அமை த்தார். 1919ம் ஆண்டில் சேர் பொன் அருணசலத்தைத் த லைவராகவும் திரு பெரியசுந்தரத்தை செயலாளராகவு ம் கொண்டு இது அமைக்கப்பட்டது. இது பிரித்தானிய தோ ட்ட முதலாளிகளின் கடுமையான தொழிலாளர் அடக்கு முறைக்கு எதிராகத் தோட்டத் தொழிலாளர்களுக்காகப் போராடத் தொடங்கியது. இதில் பல சமூகத்தவர்களும் அங்கத்தினர் ஆகினர்.

1920ல் இது இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம் எனப் பெயர் மாற்றப்பட்டது. இதில் ஏரா ளமான தொழிலாளர்கள் சேர்ந்தனர். இக்காலத்தில் ஏ.ஈ குணசிங்க என்ற தொழிற்சங்கவாதியும் சேர்ந்தார். ஆரம் பத்தில் பொதுவாக தொழிலாளர்களுக்காகப் பாடுபட்ட இவர் பின்னர் கொழும்பில் நிலவிய சிங்களவர் வே லையில் லாத் திண்டாட்டத்தையும், ம லையாளிகள், தமிழர் பொருளா தார ஆதிக்கத்தையும் அவதானித்து ஒரு வகுப்புவாத தொ ழிற்சங்கவாதியாக மாறி சிங்களத் தொழிலாளரையும், நக ரமக்க ளையும் ம லையாளத்தமிழ் தொழிலாளர்களுக்கும் வர் த்தகர்களுக்கும் எதிராக வளர்த்தெடுத்தார்.

இதே காலகட்டத்தில் இலங்கை அரசி யலிலும், விடுத லைப்போராட்டத்திலும் தமிழ்க்கல்விமான்கள் முன்னணி வகித்தனர், அவர்களின் திறமைக்கும் செல்வாக்கும் ஈடு கொடுக்க முடியாத சிங்கள த லைமைத்துவம் வகுப்பு வாத அரசியலில் தம்மை வளர்த்தெடுக்க முயன்றனர். வகு ப்புவாத தொழிற்சங்கம் முன்னெடுக்கப்படவே சேர் பொ ன் அருணசலம் தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் அரசியலி

வும் இருந்து 1923ல் ஒதுங்கினர். சேர். பொன் இராமநாதனின் மறைவும் சிங்கள அரசியல்வாதிகளுக்கு ஒரு அரசியல் தெம்பை ஊட்டியது. 1927ல் இருந்து வகுப்பு வாதம் முதன்மையடையத் தொடங்கியது.

இககால கட்டத்தில் இருந்து சிங்கள பூர்சுவாவர்க்கமும், தமிழ் பூர்சுவாவர்க்கத்தை முறியடிக்க இனவாத தேசியவாதத்தை முன்வைக்கத்தொடங்கியது. இது விரிவடைந்து கொண்டு போகவே இதன் வளர்ச்சி, சுதந்திரப் போராட்டக் காலங்களில் சற்று மழுங்கடிக்கப்பட்டுக் காணப்பட்டது.

சிங்களத் தேசிய வாதத்தின் தன்மையையும், சிங்கள பூர்சுவாவர்க்கத்தின் கபட அரசியல் தந்திரத்தையும் உணரமுடியாத தீர்க்கதரிசனமற்ற தமிழ்த்தலைவர்கள் தமிழர்களை சரியான வழியில் நடத்த முடியாமல் சுயநலத்தில் மதிமயங்கி இருந்தனர்.

இந்நிலைமையில் 1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடையவே தேசியவாதம் இனவாத அடிப்படையைக் கொண்டு வளரத் தொடங்கியது. இதன் முதல் நடவடிக்கையாக 1948ல் மலையகத் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து தமிழர்கள் அரச உத்தியோகத்தில் அதிக அளவில் இருப்பதை ஒழித்துக்கட்ட 1956ல் சிங்கள அரசகரும மொழியாக்கப்பட்டது. அடுத்து தமிழர் வர்த்தக நடவடிக்கைகளை முறியடிக்க பல்வேறு வர்த்தக கூட்டுத்தாபனங்கள் அரசாங்கத்தால் அமைக்கப்பட்டது. இறுதியாக தொழில் வாய்ப்புக்களை முற்றாக ஒழித்துக்கட்ட தமிழர்களின் கல்வியில் கைவைக்கப்பட்டது. சிங்கள குட்டி பூர்சுவாக்கள், சிங்களத் தொழிலாளர், விவசாயிகளின் கவனத்தை தமிழர்களுக்கு எதிராக

இனவாத அடிப்படையில் திருப்பி அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தைச் சுரண்டி முழு அளவிலான முதலாளிக ளாக வளர இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தினர்.

இதை உணராத தமிழ் பூர்சுவாவர்க்கத்தினரும், முதலாளித்துவ சிந்தனைத்தமிழ் தலைவர்களும் தமது வர்க்க நலனைப் பாதுகாத்துக் கொள்ள இனவாத அரசியலையே தமிழர் மத்தியில் முன்வைத்தனர். சிங்களப்பேரினவாத அரசியலுக்கெதிராகத் திட்டமிட்ட ஒரு அரசியல் ராஜதந்திரக் கொள்கையை முன்வைக்காமலும், தமிழர்களின் நலன்களில் அக்கறை கொண்ட இடதுசாரிச் சிங்களத்தலைவர்களுடன் இணங்கி போகாமலும் தமிழ் மக்களிடையே இனவாதத்தை முன்வைத்து தமது வர்க்க நலன்களைப் பாதுகாப்பதில் முன்னின்றனர்.

இருபக்க முதலாளித்துவ தலைமைகளும் இரு இனத் தொழிலாள விவசாயிகளையும் ஒன்று பட விடாது மிகவும் தந்திரமாக பிரித்து வைத்து தமது திட்டங்களை நிறைவேற்றி வந்தனர். சிங்களவர்களுக்கு மொழி உணர்வு ஏற்படவேதான் கொழும்புவாழ் மேல்மட்டத் தலைவர்களுக்கும் மொழி உணர்வு ஏற்பட்டது. சிங்களவர்களுக்குச் சமய சமயமறுமலர்ச்சி ஏற்படவேதான், தமிழருக்கும் சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது. இந்த வகையில் சிங்கள முதலாளித்துவம் திட்டமிட்டுத் தமது நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள சிங்கள மக்களிடம் இனவாதத்தைத் தீவிரமாகப் புகுத்தியது.

இதற்கு மேல்மட்ட சிங்களவர்களில் இருந்து பௌத்த பிக்குகள் ஆனவர்களும், முதலாளித்துவ சிங்களவர்களின் ஆதரவுக்குட்பட்ட பௌத்த குருமார்களும், இவ் இனவாதத்தை வரலாற்றுக்காரணங்களுடன் முன் வைத்தும்

(துட்ட கைமுனு, எல்லாளன் யுத்தம்) பிளவுகளை மேலும் வளர்த்து சிங்கள முதலாளிகள் சக்தி வளருவதற்கும் அதில் தாம் பொருளாதார ரீதியில் குளிர்காய்ந்து கொள்ளவும் தொடங்கினர். பௌத்த குருமார்கள் சகல வசதிகளையும் இதன் மூலம் அனுபவித்துக் கொண்டனர்.

வேலை நிறுத்தம் மூலம் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கோ விலைவாசி உயர்வினால் பாதிக்கப்பட்டு வாழ்க்கைதரம் குன்றிய சிங்கள மக்களுக்காகவோ, நகரப்பகுதிகளில் அடிப்டை வாழ்க்கை வசதிகள் இன்றி அவதிப்படும் சிங்கள ஏழை மக்களுக்காகவோ, சிங்கள விவசாயிகளுக்காகவோ, சாதி அமைப்பின் மூலமும், நில உடைமையின் மூலமும் நசுக்கப்படும் சிங்கள கிராமிய மக்களுக்காக குரல் கொடுக்கவோ அல்லது போராடவோ முன்வராத இந்த பௌத்த குருமார்கள் சிங்கள முதலாளித்துவத்தைப் பாதுகாக்க சிங்களத்தையும், பௌத்த மதத்தையும் பாதுகாக்க முன் வாருங்கள் என்ற போர்வையில், சிங்களத் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் தமிழ் மக்களுக்கு எதிராகத் தூண்டி விட்டுக் கொண்டிருந்தனர். தூண்டி விட்டு கொண்டும் இருக்கின்றனர். இதனால் சிங்களவர் மத்தியில் இடதுசாரி அரசியல் தன்மைகள் அமுக்கப்பட்டுவிட்டன. சிங்களமக்கள் வர்க்க ரீதியாக அரசியல் விழிப்புணர்ச்சி பெறமுடியாமல், பேரினவாதத்தினால் சிந்தனைகள் மழுங்கடிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றனர்.

இப்பேரினவாதத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் குறிப்பாக வடக்கு கிழக்குவாழ் தமிழ்மக்கள் நீண்டகால சாத்வீகப் போராட்டத்தில் தோல்வியைக்கண்டபோது புதிய சிந்தனை உருவாகியது. 1970ம் ஆண்டுகளிந்

தொடர்ந்து சாத்வீகப் போராட்டம் தீவிரமடையத்தொடங்கியது, இது தமிழர்களின் அரசியல் போராட்டத்தின் இரண்டாம் கட்ட வளர்ச்சியின் ஆரம்பமாகும் (முதலாம் கட்டப் போராட்டம் பாராளுமன்ற ரீதியிலான சாத்வீகப்போராட்டங்களாகும்)

1970-1977 க்கும் இடையிலான காலகட்டத்தில் ஆட்சியில் இருந்த சிங்கள அரசு மேற்கொண்ட பொருளாதார, அரசியல் ஊழல் நிறைந்த ஆட்சி முறையினால் அவர்கள் எதிர் நோக்கிய பொருளாதார கஸ்டங்களினால். விளைந்த அரசியல் எதிர் விளைவுகளின் தாக்கத்தினால் தமக்கெதிரான சிங்கள மக்களின் எதிர்ப்பை முறியடிக்கவும். சிங்கள மக்களின் அரசியல் உணர்வுகளை திசை திருப்பவும், மழுங்கடிக்கவும் மிகவும் கடுமையான அடக்கு முறைகளை மேற்கொண்டு தமிழர்களின் சாத்வீகப் போராட்டங்களை முறியடிக்க முற்பட்டனர்.

இதனால் சாத்வீகப் போராட்டத்தைக் கைவிட்டு ஆயுதம் ஏந்தியப் போராட்டத்தை நாடினர். ஆயுதம் ஏந்திய போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அது சிங்கள பேரினவாதத்தையும் அரசையும் முறியடிக்கும். ஒரு குழுப்போராட்டமாக இருந்தது. சிங்கள அரசுக்கு ஆயுத ரீதியிலான அரசியல் நெருக்கடியை உண்டாக்குவதின் மூலம் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளுக்கு உதவும் நோக்கம் இதில் காணப்பட்டது.

இப்போராட்டத்திற்கு எதிரான அரச அடக்கு முறைகளும், தமிழ் மக்களுக்கெதிரான 1977, 81, 83ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட இனப்படு கொலைகளும், சொத்தழிப்புகளும், பொருளாதார முடக்கங்களும்,

தமிழ் இளைஞர்களின் விடுதலைப்போராட்டத்தை தீவிரப்ப டுத்தியது. போராட்டம் தீவிரமடையும் காலத்தில் தமிழ் மக்களின் பிற்போக்குவாத அரசியல் தலைமை போராட் டங்களை காட்டிக் கொடுக்கவும், மழுங்கடிக்கவும் சகல தந்திரங்களையும் மேற்கொண்டது. ஆனால் போராட்டம் பரந்த அளவில் இளைஞர் போராட்டமாகவும் பரிணமம் பெறும்போது அங்கு சிந்தனைத் தெளிவு, போராட்டஇயக் க அமைப்புகளில் ஏற்பட்டது. இந்நிலையில் போராட்டம் புதிய சிந்தனையில் நெறிப்படுத்தப்படும்போது, தீவிரவாத அரசியல் இயக்கங்கள் போராட்டத்தின் நோக்கத்தினை விஞ்ஞான ரீதியில், பொருள் முதல்வாத சிந்தனையின் அடிப் படையில் பார்க்கத் தொடங்கின. வங்காள தேசப் போ ராட்டம் தந்த பாடத்தைக்கொண்டு, தமிழ் முதலாளித்துவ சக்திகளின் விடிவுக்காகவும், அபிலாசைகளுக்காகவும் போ ராடாமல், தமிழ் பாட்டாளிகளுக்காகப் போராடச்சிந்தி த்தார்கள். போராடப்புறப்பட்டவர்களில் 95% இளைஞர் கள் பாட்டாளிகளின் பிள்ளைகளேயாகும்.

சிங்களப்பேரினவாத அடக்கு முறைகளுக் கு மட்டுமல்லாமல் தமிழ்ச்சமுதாயத்தில் காணப்பட்ட படு பிற்போக்கான சாதி அமைப்பு, சீதனமுறை, பெண் அடிமை, நிலவுடமை, முதலாளித்துவ சக்தி என்பவற்றிற்கெதிராகவு ம் போராட வேண்டி உள்ளதை அறிந்து கொண்டனர். இத ன் அடிப்படையில் கூர்மையான தீர்க்க தரிசன ஆற்றல் கொண்ட இளம் தலைமுறைத்தலைமை தோன்றத் தொடங் கியது. அந்தத் தலைமையின் கீழ் இன்று தேசியப்போராட் டத்துடன் வர்க்கப்போராட்டத்தையும் இணைத்து இரண்டை யும் சம காலத்தில் முன்னெடுத்துச்செல்ல முற்பட்டுள்ளது

தமிழீழமக்கள் விடுதலைக்கழகம். (இது தமிழீழமக்கள் விடுதலைக்கழகப் போராட்டத்தின் 3ம் கட்ட போராட்டமாகும்.)

ஆரம்பத்தில் தேசியப்போராட்ட முனைப்புடன் தொடங்கிய இவ்வியக்கம் பின்னர் வர்க்கப்போராட்டத்துடன் இணைந்து கொண்டபோது, அது தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது எனலாம். ஆரம்ப காலத்தில் கழகம் ஆயுத தேவைக்காகவும், இளைஞர்களுக்கு எதிரான அரச உளவுச்சேவையை உடைத்தெறியவும், கொரில்லாப் போராட்ட வடிவமாகப் போராட்டத்தை தொடங்கியது. நிதித் தேவைக்காகத்தமிழ் பகுதிகளில் வங்கிகளைக் கொள்ளையடிப்பதையும், ஆயுதங்களுக்காக பொலிஸ் நிலையங்களை தாக்குவதையும் காலப்போக்கில் சுயவிமர்சன அடிப்படையிலும் விஞ்ஞானபூர்வமான சிந்தனை அடிப்படையிலும் கைவிட்டு கழகத்தையும் கட்டமைக்க முற்பட்டது.

மக்கள் அமைப்புக்களை கட்டி அமைப்பதிலும், மக்களை அரசியல் மயப்படுத்துவதிலும் முழு மூச்சாக இயங்கியது. அதேவேளை ஒரு அரசாங்கத்திற்கும் அதனால் கட்டமைக்கப்பட்ட இராணுவத்திற்கும், பலமடங்கு மேலதிக சனத்தொகையை கொண்ட பாசிச அரச அமைப்புக்கும் எதிராக அறிவு ரீதியில் உணர்ச்சி பூர்வமாகப் போராட முன்வந்த தமிழ் இளைஞர்களை அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் கட்டமைத்து, நவீன ஆயுதங்களுடன் அடக்கு முறையை மேற்கொள்ளும் சிங்களப்பேரினவாத அரசுக்கும் இனவாத இராணுவத்துக்கும் எதிராகத திட்டமிட்டு நவீன யுத்த தந்திரங்களுடனும், ஆயுதங்களுடனும் ஒரு போரி

ஊைச் சந்தித்து இனத்தையும் நிலத்தையும் விடுவிக்க முயன் றுள்ளது. இதனால் தீவிர அரசியல், யுத்த தயாரிப்புக்களில் அது மிகவும் அக்கறை கொண்டது. எதிரியை பேச்சுவார்த்தைக்கு அழைக்கவும் (சில இயக்கங்கள் தமது தாக்குதலால்தான் ஜே. ஆர். பேச்சுவார்த்தைக்கு வந்துள்ளார்என சிந்தனைத் தெளிவு இல்லாமல் மார்பு தட்டிக்கூறின) அற்ப சொற்பங்களை அவனிடம் இருந்து பெறுவதற்கும் கொரில்லாப் போராட்டத்தை நடாத்த தமிழீழமக்கள் விடுதலைக்கழகம் முன்வரமாட்டாது. பரந்த அளவில் ஆயுதம் ஏந்தி முழுமக்களின் விடுதலைக்காகவும் போராடுவதையே நோக்கமாகச் செயல்படுகின்றது.

மேலும் எமது போராட்டத்தில் மாக்சிச லெனினிச சித்தாந்தத்தை நாம் முன்வைத்தபோதும் அதனை முன்னெடுத்துச் செல்ல தற்போதைய சோசலிச நாடுகளின் விடுதலைப் போராட்ட முறைகளையும், யுத்த யுக்திகளையும் அப்படியே நேரடியாகப் பின்பற்ற முடியாது என்பது யதார்த்த பூர்வமாகக் கண்டு கொண்டோம். போராட்ட காலம், பொருளாதார அமைப்பு, பூகோல அமைப்பு, எதிரியின் தன்மை, சமூக அமைப்பு, நாடு அமைந்துள்ள பிராந்தியத்தின் அரசியல் சூழ்நிலை என்பவற்றின் அடிப்படையில் சோசலிசப் போராட்டம் வெவ்வேறு முறையில் ரஸ்யாவில், சீனவில், கியூபாவில், வியட்நாமில் முன்னெடுக்கப்பட்டது. இங்கு நடைபெற்ற போராட்ட யுக்திகள் வெவ்வேறுபட்டவை. ஆனால் இந்நாடுகளில் நிலைநாட்ட முற்பட்ட பொருளாதார அமைப்பு மாக்சிச பொருளாதார அமைப்பாகும். அதாவது பாட்டாளிவர்க்க பொருளாதார அமைப்பாகும். எனவே இன்று எமது சமூக சூழ்நிலை, பொருளாதார அமைப்பு, பூகோள அமைப்பு, எதிரியின் தன்மை எமது

பிராந்திய அரசியல் சூழ்நிலை என்பவற்றுக்கேற்ப எமது போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதில் நாம் பின்வரும் அம்சங்களை கவனிக்கவேண்டும்.

(1) எதிரியின் ஆட்பலமும், இராணுவ பலமும்.

(2) எதிரியின் பின்பலம்.

(3) பூகோள அமைப்பும், மக்கள் பரம்பல் அமைப்பும்.

இம்மூன்று அம்சங்களிலும் எதிரி இன்று எமக்கு எதிரான, தனக்குச்சாதகமான சூழ்நிலையைக் கொண்டுள்ளான். எதிரியினதைவிட எம்மிடம் உள்ள மேலதிகபலம், விடுதலைப்போராட்ட உணர்வுப்பலமேயாகும். இதனை அறிவு ரீதியில் உணர்ச்சிப் பூர்வமாக வளர்த்து, எதிரிக்கெதிரான யுத்த தந்திர முறையை தெறிப்படுத்தி வலிமையாகப் பயிற்றப்பட்ட இராணுவத்துடன் நவீன ஆயுதங்களைக் கொண்டு எதிரியை தாக்கி முற்றாக முறியடிக்க வேண்டும். ரஷ்யாவில், சீனாவில், கியூபாவில், வியட்நாமில் அந்நாட்டு மக்கள், அவர்களின் நிலத்தில், அவர்களின் முதலாளிகளுக்கும், ஏகாதிபத்தியத்திற்கும் எதிராகப் போராடியதுபோல் எமது போராட்டம் அமையமுடியாது. அவ்வாறானால் எதிரி எம்மை அழித்து விடுவான். மேற்கூறிய நாடுகளில் முதலாளிகளுக்குச் சார்பாகப் போராடிய அந்நாட்டுமக்களைக் கொண்ட இராணுவம் பின்னர் மக்கள் பலத்திற்கு எதிராகப் போராடமுடியாமல், தாமும் பின் மக்களுடன் இணைந்து போராடி மக்களின் எதிரியை முறியடிக்க உதவின. ஆனால் இங்குள்ள இராணுவம் முழுக்க முழுக்க ஒரு பேரினவாத இராணுவமாகும். வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள். எனவே எமது நிலத்தில் நடாத்தும் கொரில்லாப்போராட்டத்தில் எம்மைப்பாதுகாக்கும்

மக்களையும், அதன் அமைப்பையும் தகர்ப்பதின் மூலம் மக்களை அனாதைகள், அகதிகள் ஆக்குவதின் மூலமும் எமது தளப்பிரதேசத்தை அழிக்க எதிரிக்கு இடம் கொடுத்து விடுகின்றோம். தமிழீழ எல்லைப்பிரதேசங்களில் மேற்கொண்ட தாக்குதல்கள் இந்நிலைமையையே உருவாக்கிப் போராட்டத்தை பின்தள்ள வைத்துள்ளது எந்த மக்களின் உதவியுடன் போராட்டத்தை முன்னெடுக்க முயன்றோமோ அதே மக்களை நாம் இன்று அகதிகளாகப் பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எல்லைப்புறங்களில் அகதிகள் முகாம்களில் மக்கள் வாழ்கின்றனர் திட்டமிடப்படாத, தீர்க்கதரிசனமற்ற போராட்ட முறைகளின் பின் விளைவுகளை இன்று நாம் நாளாந்தம் அனுபவிக்கின்றோம். எதிரிக்கெதிரான திட்டமிடப்படாத தாக்குதல்களால் எமது யுத்ததந்திரங்களையும், ஆயுதபலத்தையும் காட்டிக் கொடுத்து விடுகின்றோம். தமிழீழமக்கள் விடுதலைக்கழகம் எல்லைப்புறத்தில் இருந்து போராட்டத்தை ஆரம்பித்து எதிரியின் நிலத்திலேயே யுத்தத்தை நடாத்த முற்படுகின்றது.

இது இன்று பிற்போக்குவாத இயக்கங்களினால் பலவீனப்படுத்தப்படுகின்றது. மேலும் எதிரிக்கு உள்ள பின்பலம் போன்று அதாவது அமெரிக்க, மொசாட். எஸ். ஏ. எஸ் இராணுவ யுத்ததந்திர ஆலோசனை உதவி, சீன, பிரித்தானிய, அமெரிக்க, தென்கொரிய ஆயுத உதவிகள் போன்ற உதவி எமக்கு இல்லை.

ஆனால் புவியியல், அரசியல் சூழ்நிலையினால் இந்தியாவை எமக்குப் பின்பலமாகக் கொள்ள வேண்டி உள்ளது. பொதுவாக இந்திய மக்களின் அனுதாபமும், குறிப்பாக தென் இந்திய தமிழ்மக்களின் தார்மீக ஆதரவும் —

தான் எமக்கு உண்டு. எனவே இன்று எமது பிரச்சனையைத் தீர்த்துவைக்க முயலும் இந்தியாவுடன் நாம் அரசியல்ராஜதந்திர ரீதியில் ஒத்துழைக்க வேண்டியுள்ளது. ஏன்னெனில் சில நேச சக்திகள் இந்தியாவின் நெருங்கிய நேசசக்திகளாக உள்ளன. இவை இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள எமது பிரச்சனையை இந்தியாவின் மூலமே தீர்க்கவும், அவர்களின் தீர்வுக்கே விட்டுள்ளன. இதனால் நாம் சில ராஜதந்திர அணுகுமுறையை மிகவும் அவதானமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது.


எதிரி பேச்சுவார்த்தை மூலம் எமக்கு எதுவித உரிமையையும் தரமாட்டான் என்பது 100% உண்மையாகும். எனவே இதனை நடைமுறையில் இந்திய மக்களுக்கும், அரசுக்கும், உலக சமுதாயத்திற்கும் எடுத்து உணர்த்த சமீபத்திய பேச்சுவார்த்தைகளை நாம் ஒரு சந்தர்ப்பமாக கொண்டுள்ளோம். சர்வதேச ராஜதந்திர தரத்திற்கு எமது காய்களை மிகவும் கவனமாக நகர்த்துகின்றோம்.

இன்று எமது போராட்டம் ரஸ்ய, சீன, கியூப, வியட்நாமிய போராட்டம் போன்றதல்ல. நிலத்தை விட்டு வெளியேறி அகதிகளாகப் போராடிக்கொண்டிருக்கின்றோம். போராட்டம் திட்டமிட்டு முன்னெடுக்கப்படாவிட்டால், எமது நிலத்தைவிட்டு பாலஸ்தீனியர் போல் வெளியேற்றப்படுவோமானால் நமது போராட்டம் மிகவும் கடுமையானதாகிவிடும். எனவே இன்றைய போராட்டம் மிகவும் அவதானமான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும். குழுநிலையில் இருந்து நாம் போராட முடியாது. இந்நிலையிலேயே தமிழீழமக்கள் விடுதலைக்கழகம் யுத்தத்துக்கான தயாரிப்பில் முழு மூச்சுடன் ஈடுபடுவதுடன்

சிங்கள பேரினவாத ஆட்சியாளர்கள் பிரச்சினையைத்தீர்க்க இயலாமை நிலையில் உள்ளதை எடுத்துக்காட்ட பேச்சுவார்த்தையிலும் ஈடுபடுகின்றோம். எமது கணிப்பு மிகவும் சரியானதாகும். எமது பாதை தமிழ்மக்களுக்கு பூரண விடுதலையையும், பொருளாதார சுதந்திரத்தையும் அதாவது வர்க்கமற்ற ஒரு அரச அமைப்பையும் பெற்றுக் கொடுக்கும் என்பதைத் தெளிவாக உங்களுக்குக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

சரியான சிந்தனைக்கண்ணோட்டத்தில் பார்த்தால் எம்மைநீங்கள் ஆதரிப்பீர்கள். உங்களுக்குள்ளேயே எல்லாப்பிரச்சனைகளுக்கும் கேள்விகளை எழுப்பி விடையைத் தேடுங்கள் அது தமிழீழமக்கள் விடுதலைக்கழகத்திலேயே இருக்கும். இன்று இன வர்க்க விடுதலைக்காகப் போராட பல ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு சார்ந்து நிற்கும் ஒரு மக்கள் விடுதலை அமைப்பை ஆதரித்துப் போராட்டத்தை முன்னெடுக்க வாருங்கள். இன்று தமிழீழமக்கள் விடுதலைக்கழகம் அரசியல் அமைப்பு ரீதியாகவும், இராணுவ அமைப்பில் சிறந்த யுத்த தந்திர ரீதியிலும் நன்கு கட்டி அமைக்கப்பட்டு பலமான ஸ்தாபனமாக அமைந்துவிட்டது. சகலவகையிலும் பூரணத்துவம் வாய்ந்த ஒரு அமைப்பாக தமிழீழமக்கள் விடுதலைக்கழகம் அமைந்து விட்டமையினால் அது விரைவில் எதிர்ப்புரட்சி சக்திகளையும், பொது எதிரியையும் முறியடித்து தனது மக்களின் மேலான அபிலாசைகளையும் நிறைவேற்றிவைக்கும்.

சிவச்சந்திரன், பிரான்ஸ்




DOLLARS
(in millions of dollars)
5.9
1980
35.5
1981
82.0
1982
81.3
1983
197
1984


# நவசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவநாணயக்காரவின் கருத்துக்கள்-

சமீபத்தில் மேற்கு ஜேர்மனிக்கு வருகைதந்த நவசமாஜக்கட்சி தலைவருடன் 'விடுதலைக்குரல்' ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டது. அவர் கூறிய கருத்துக்கள் கீழே பிரசுரமாகியிருக்கின்றது.

## தமிழ்மக்களின் பிரச்சனைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கப்படமுடியுமா?

திம்பு பேச்சுவார்த்தைகளின் மூலம் தமிழ்மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பெரிதாக ஒன்றும் செய்து விட முடியாது. தமிழ்மக்களின் ஆகக்குறைந்த அடிப்படை தேவைகளான மாவட்ட நிர்வாகம் (வடக்கு கிழக்கு) குடியேற்றத்திட்டங்களை நிறுத்துதல், வடக்கு கிழக்குப்பகுதிகளின் பொலீஸ் நிர்வாகத்தை தமிழ்மக்களிடம் ஒப்படைத்தல் போன்றவற்றில் ஒரு உடன்பாட்டிற்கு வரலாம். அப்படி ஒரு உடன்பாட்டிற்கு வந்தாலும் கூட ஒரு ஐக்கிய தேசியக்கட்சியின்





பாராளுமன்றக்குழு அதைநடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துக் கொள்ளமாட்டாது. கடந்தகாலங்களில் உடன்பாட்டிற்கு வந்தமையும் அவற்றிற்கு என்ன நடந்தது என்பதையும் எல்லோரும் அறிவார்கள்.

<u>ஏதாவது உடன்பாட்டிற்கு வந்தால் நவசமாஜக்கட்சியின் நடவடிக்கை என்ன?</u>

ஏதாவது ஆகக்குறைந்த உடன்பாட்டிற்கு வரமுடிந்தால் அது இனவாதத்திற்கு எதிராகவே இருக்கும். ஆகையால் நாங்கள் அதைப்பாதுகாப்போம். ஆனால் இப்பேச்சுவார்த்தைகளில் நாங்கள் ஜெயவர்த்தனாவிற்கு ஆதரவளிக்க முடியாது. தமிழ்மக்களையும், தொழிலாளர்களையும், மாணவர்களையும் கொன்றுகுவிக்கும் ஜெயவர்த்தனாவினால் தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. எங்களுக்கு அதில் முற்றுமுழுதாக நம்பிக்கையில்லை. இப்பேச்சுவார்த்தைகளின் மூலம் தனது பிரச்சனைகளைத்தீர்ப்பதற்கான "மூச்சுவிடும் நேரமே" ஜெயவர்த்தனாவிற்குத் தேவை. இதற்கு நாங்கள் ஒருபோதும் ஆதரவாக இருக்கமுடியாது.

<u>தமிழ்மக்களின் தமிழீழக்கோரிக்கையை நீங்கள் அங்கீகரிக்கின்றீர்களா?</u>

தமிழ்மக்களின் போராட்டத்திற்கு முதலாளித்துவ சக்திகள் தலைமை தாங்காமல் புரட்சிகரசக்திகள், தலைமை தாங்குவது வரலாற்றில் தவிர்க்கமுடியாதது ஆகும். ஆனாலும் 'தனிநாடு' என்ற கோசம் நாட்டிலுள்ள முழு தொழிலாள, விவசாயமக்களையும் முதலாளித்துவத்திற்கும், அரசாங்கத்திற்கும் எதிராக அணிதிரட்ட வேண்டிய

முக்கியத்துவத்திற்கு மாறாகவே இருக்கின்றது. நாங்கள் தனிநாடு என்ற கோசத்தைவிட சுயநிர்ணய உரிமையையும், பிரிந்து செல்வதற்கான உரிமையையும் வலியுறுத்துகின்றோம். இடதுசாரி அரசாங்கம் ஒன்று இலங்கைத்தீவில் அமைக்கப்பட்டால் பிரிந்து செல்லவேண்டிய தேவை இருக்காது. அதை தமிழ்மக்களே பின்னர் தீர்மானிக்கலாம்.

<u>வேறு சில சிங்கள குழுக்கள் தமிழீழத்தை அங்கீகரிப்பதைப்பற்றிய உங்கள் கருத்து?</u>

நாங்களும் கூட 'தமிழீழத்தை' ஏற்றுக்கொள்ளுகின்றோம். ஆனால் வலியுறுத்தவில்லை. ஸ்ரீலங்காவில் இடதுசாரி அரசாங்கம் அமையும்போது, வடக்கு கிழக்குப்பகுதிகளிலுள்ள தமிழ்பாட்டாளிகளும் விவசாயிகளும் பிரிந்துபோவதை விரும்பினால் நாங்கள் அதை ஏற்றுக்கொள்கின்றோம். அப்படி பிரிந்து போவது அவர்களது உரிமை. நாங்கள் இதை 'எகலிய கொட' இடைத்தேர்தல் பிரச்சாரங்களில் வலியுறுத்தி இருக்கின்றோம்.

உங்களது முழுமையான வசதிகளும், முதன்மையான கவனங்களும், ஆட்பலமும், தொழிலாளவிவசாய மக்களை அவர்களின் கோரிக்கைகளின் கீழ் அணிதிரட்டுவதற்கு பிரயோகிக்கப்பட வேண்டும். அது தமிழ்மக்களின் விடுதலையையும் இணைத்ததாக இருக்கவேண்டும்.

நாங்கள் தென்னிலங்கையில் வலியுறுத்துகின்றோம் தமிழ்மக்களின் போராட்டங்களுக்கு ஆதரவளிக்கவேண்டியதன் கட்டாயத்தை. ஏனெனில் சிங்களமக்களைப்போலவே அவர்களும் அரசாங்கத்தினால் ஒடுக்கப்பட்டுள்ளார்கள்.

நாங்கள் இந்த அரசாங்கத்தை தோற்கடிக்கும்போது தொழிலாள விவசாயிகளே அதிகாரத்திலிருப்பார்கள். வடக்கு கிழக்கிலும்கூட தொழிலாள விவசாயிகளே அதிகாரத்திலிருப்பார்கள். உலகத்தில் தொழிலாள விவசாயிகள் ஒருவரைவிட்டு ஒருவர் ஒருபோதும் விலகமாட்டார்கள். நீண்ட தூரங்களால் பிரிக்கப்பட்டிருந்தாலும் ஒன்றுக இணைவதற்கே முயற்சி செய்வார்கள். இது இயற்கையானதே.

எங்களது பொது எதிரி தோற்கடிக்கப்பட்டு நாங்கள் நண்பர்களாயிருக்கும்போது பிரிவினை ஏன் அத்தியாவசியமாகின்றது.

<u>திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்திட்டங்கள் பற்றி உங்களது கருத்து என்ன?</u>

இனவாத அரசாங்கங்களினுல் தமிழ்பிரதேசங்களில் திட்டமிட்டு குடியேற்றப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டதை வன்மையாகக்கண்டிக்கின்றேம். இதுதமிழ் சிங்கள மக்களிடையே கருத்து வேறுபாடுகளை ஆழமாக்கும். ஆங்கிலேயர் வருவதற்கு முன்னர், தமிழ்மக்கள் வாழ்ந்த பிரதேசங்கள் தமிழ்மக்களின் பாரம்பரிய நிலங்கள், நீண்டகாலமாக இப்பிரதேசங்களில் குடியேறிவாழும் சிங்கள மக்களை வெளியேற்ற முடியாது. ஆனல் திட்டமிட் புதிய குடியேற்றத்திட்டங்கள் வெளியேற்றப்படவேண்டும். தமிழ்மக்கள் விரும்பினல் இப்புதிய குடியேற்றத்திட்டங்களில் குடியமர்த்தப்பட்ட சிங்கள மக்கள் தொடர்ந்தும் வாழ்வதற்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.


சிங்கள மக்கள் மத்தியிலான தமிழீழமக்கள் விடுதலைக் கழகத்தின் நடவடிக்கைகள்பற்றி உங்கள் கருத்துக்கள்?

ஸ்ரீலங்காவில் இருக்கும் தொழிலாளவர்க்கத்தை அணிதிரட்டுவதற்கு உங்கள் இயக்கம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். உங்களது தோழர்களை இதற்குத்தயாரிக்க வேண்டும். உங்களது சக்திகள், நிதிவசதிகள் ஆகியவற்றையும் இதில் செலவளிக்க வேண்டும். உங்களது சிங்கள வானொலி ஒலிபரப்பு சிங்களப் பகுதிகளில் மிகப்பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. சிங்களமக்களுக்கெதிராக தமிழ்மக்கள் போராடவில்லை என்று சிங்களத்தில் ஒலிபரப்புச் செய்வதும், சிங்கள ஒலிபரப்பை சர்வதேச கீதத்துடன் ஆரம்பிப்பதும் சிங்கள மக்களின் இதயங்களை நெகிழவைத்திருக்கின்றது. இவ்வானொலியை சிங்கள மக்கள் தங்கள் வானொலியாகவே கருதுகின்றார்கள். இதில் உங்களுடைய கடமையை சரியாகவே செய்திருக்கின்றீர்கள்.

கடந்தகாலங்களில் தமிழ் அரசியல்வாதிகளும் பங்கெடுத்து வளர்த்துவிட்ட இனவாதத்தை உடைப்பதற்கு முக்கியமாக தமிழீழமக்கள் விடுதலைக்கழகம் முயற்சி எடுத்திருக்கின்றது.

ஆரம்பத்தில் தாக்குதல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட உங்களது போராட்டம் பின்னர் மக்களை அணிதிரட்டும் வண்ணம் மாற்றமடைந்தது. இன்னும் உங்களது முக்கியமான நடவடிக்கை ஆயுதம்தாங்கிய போராளிகளைத் தயாரிப்பதாகவே இருக்கின்றது. இச்சந்தர்ப்பத்தில் நீங்கள் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பதாக நான் கருதினாலும், சிங்கள முதலா

ளித்துவ அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உங்களது பாதுகாப்புகருதி இத்தேவை இருக்கின்றது. ஆனாலும் சிங்கள தொழிலாள விவசாய மக்களை அணிதிரட்டவேண்டிய தேவை முக்கியமானது.




எகிப்திய விமானத்தைக் கடத்தி "பயங்கரவாதத்தை" அடக்கி விட்டதாக கூறும் ரேகனை மாடுமேய்ப்பவன் மாடுகளைப் பிடிப்பதைப்போல் விமானத்தைப்பிடித்து குதிரையிலிருந்து விழுபவனாக 13.10.85 SUDDEUTSCHE ZEITUNG ஜேர்மன் பத்திரிகை கருத்துத் தெரிவிக்கின்றது.

# விடுதலை இயக்கங்களின் சமூக விரோத நடவடிக்கைகள்

சமீபகாலத்தில் தமிழீழத்தில் பரவலான அளவில் இயக்கங்களின் பெயரில் தனியார் வீடுகளிலும் வர்த்தக ஸ்தாபனங்களிலும் நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலை வழங்கும், தொழில் நிறுவனங்களிலும் பலத்த கொள்ளைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கொள்ளைகள் சில இயக்கங்களினாலும், தனிப்பட்ட கொள்ளைக்கூட்டங்களினாலும் மேற்கொள்ளப்படுகின்றன. சில இயக்கங்கள், போதிய அளவு வெளிநாட்டு அரசாங்கத் தொடர்பு இல்லாமையால்போதிய அளவு நிதிமூலங்கள் பெற முடியாத நிலையில் இருப்பதினால் அவை தமது நிதி மூலத்திற்கு தமிழ்மக்களை மிகவும் பாதிக்கத்தக்க கொள்ளைகளை மேற்கொள்கின்றனர். குறுகிய காலத்தில் அதிக நிதியைச் சேர்த்து அதன் மூலம் அதிக இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்து தமது இயக்கத்தை மிகப்பெரிய இயக்கமாக வெளியில் காட்டவும்அரசியல் நெறிப்படுத்தப்படாத தமது ஆதரவாளர்களை ஆயுதமயமாக்கவும் முயன்றுள்ளனர்.

சில இயக்கங்கள் தமது அமைப்பை புத்திஜீவிகள் மட்டத்தில் சித்தாந்த ரீதியில் மட்டும் நீண்டகாலம் வைத்திருந்துவிட்டுப் பின்னர் தமிழீழமக்கள் விடுதலைக்கழகம், மக்கள் அமைப்பு, அரசியல் இராணுவ ரீதிகளில் வலுவடைந்து வந்ததைக்கண்டு அதை ஜீரணிக்கமுடியாது தாமும் அதே நிலையை அடைய முடியாவிடினும் இராணு-

—வ ரீதியில் துரிதமாக வளர்ச்சி அடைய வேண்டும் என த்தமது இராணுவத்தை கட்டி எழுப்ப முயன்றனர். இரா ணுவத்தைக்கட்டி அமைக்கப் போதிய அளவு நிதிமூலம் இல்லாமையால் இன்று அன்றுடம் தமிழீழமக்களையும், சமூகப் பொருளாதார அமைப்புக்களையும் கொள்ளையடி ப்பதில் ஈடுபட்டுள்ளனர். அவசரப்பட்டு அவதியவதியாகத் தமது குழுவுக்கு ஆட்கள் சேர்க்க முற்பட்ட நிலையில் இன்று இவர்கள் உதிரிப்பாட்டாளிவர்க்கத்தைச் சேர்ந்தவ ர்களையும் சிறு குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவ ர்களையும், அரசியல்மயப்படுத்தாமலும், சித்தாந் தமயப்படுத் த்தாமலும் வெறுமனே சேர்த்துக்கொண்டு, இராணுவ அந்தஸ்து கொடுத்து சில்லறை இராணுவப் பயிற்சி அளி த்துத் தமது படையாகக் கொண்டு செயற்பட முற்பட்டு ள்ளார்கள். இவர்கள் முதலாளித்துவத்தை அழிக்கின்றோம், இயக்கத்திற்கு நிதி சேர்க்கின்றோம் என்ற நிலையில் இன்று பலருடைய வீடுகளையும் வர்த்தக ஸ்தாபனங் களையும் கொள்ளையிடுகின்றனர். கொள்ளையடிக்கும் போது ஏற்படும் எதிர்ப்புக்களை முறியடிக்க பெண்க ளையும், குழந்தைகளையும் மிருகத்தனமாகத் தாக்கியுள் ளனர். உடைமையாளர்களை கொன்றும் இருக்கின்றனர். இவர்கள் பிழையான ரீதியில் சித்தாந்தம் போதிக்கப் படுள்ளனர். முதலாளித்துவத்தை உடைத்தெறிகின்றோம் என்ற போர்வையில் சொந்த தேவைக்காகவும் வளர்ச் சி பெறாத பரந்துபட்ட ரீதியில் மக்கள் ஆதரவு இல்லா த இயக்கத்தேவைக்காகவும் மக்கள் சொத்துக்கள் கொ ள்ளையடிக்கப்படுகின்றன.

ஒருவட்டிக்கடைக்காறனையோ அல்-

-லது ஒரு வர்த்தகலையோ கொள்ளையடிக்கும் போது அது எந்த அளவு தூரம் சமூகத்தைப் பாதிக்கின்றது என்பதை இந்தச்சித்தாந்த தெளிவற்ற அரைவேக்காட்டு இயக்கத்தலைமைகள் உணரமுடியாமல் இருக்கின்றார்கள்.

வட்டிக்கு பணம் கொடுப்பவர் வீட்டில் அடகு நகைகளை கொள்ளையடிப்பதின் மூலம் நகை அடைவு பிடிப்பவர்கள்தான் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதாக இக்கொள்ளை இயக்கங்கள் நம்புகின்றன. ஆனால் 500ரூபா தேவைக்காக 3000 ரூபா பெறுமதியான நகைகளை அடகுவைத்த பொதுமக்கள், ஏழைகள் ஏராளமானோர் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை இவர்கள் உணருவதில்லை. இது உண்மையில் ஏழைகளைக் கொள்ளையடிப்பது போன்றுதான் உள்ளது. வீடுவீடாக பலாத்காரமாகவும் தங்கம் சேர்த்த ஒரு இயக்கத்திற்கு புறம்பாக வேறு சில பின்தள்ளப்பட்ட இயக்கங்கள் இக்கொள்ளை முயற்சியில் ஈடுபட்டுள்ளன. தமது விவசாய முதலீட்டுத் தேவைக்காகவும், சமூக கடைமைப்பாட்டுத் தேவைக்காகவும், சமீபகாலத்தில் தமது பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வருதியத்தை இழந்தமையால் நாளாந்த வாழ்க்கைத் தேவைக்காகவும், தமது சேமிப்பாக வைத்திருந்த தங்க நகைகளை பல நூற்றுக்கணக்கான ஏழை மக்கள் வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களிடம் அடகு வைத்துப் பணம் பெற்றிருந்தனர். இவர்களின் தங்க நகைகளின் பெறுமதியில் பார்க்க குறைந்த அளவுப் பணத்தையே கடனாகப் பெற்றிருந்தனர். இன்று அவர்கள் தமது கடனுக்கு மேலான தமது பெறுமதியான சொத்தை இயக்க கொள்ளையரிடம் பறிகொடுத்து விட்டு தவிக்கின்றனர். இக்கொள்ளைகளை மறா-

-டர்ந்து இன்று மக்கள் பரந்த அளவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும், கூட்டங்களையும் நடத்தி இயக்கங்களை கண்டிக்கின்றனர். இது எமது மக்களை எமக்கு எதிராக ஒன்று திரட்டவும் திசை திருப்பவும் விரக்தியடையவும் வைக்கும் நடவடிக்கையாக அமைகின்றன, இந்த இயக்கங்களையும், கூட்டங்களையும் இனம்கண்டு மக்கள்முன் அம்பலப்படுத்தித் தோற்கடிக்க வேண்டிய கடமைப்பாடு பொறுப்பான இயக்கங்களுக்கு ஏற்பட்டுள்ளது எனலாம்.

அடுத்து வர்த்தகர்களை கொள்ளையடிப்பவர்களும் ஒரு சமூகத் துரோக நடவடிக்கையை மேற்கொள்கின்றனர் எனலாம். சமூகத்திற்குத் தேவையான பொருட்களை இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் (வர்த்தகர்கள் இலாப நோக்கத்தோடு செயல்பட்டாலும்) மக்களுக்கு வினியோகிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வர்த்தகர்களைக் கொள்ளையிடுவதின் மூலம் உண்மையில் பொருள் வினியோக, குறிப்பாக அத்தியாவசியப் பொருள் வினியோக முயற்றிகளை முறியடிக்கின்றனர் எனலாம். இன்றைய தமிழ்ழபொருளாதார அமைப்பு முறையில் இப்பொருள் வினியோக முறையை உடனடியாக உடைத்தெறிய முடியாது. இது தொடரப்பட வேண்டியதே.

கொள்ளை இலாபத்தை தடுக்கலாமே ஒழிய வியாபார முயற்சியைத் தடுக்க கூடாது. இக்கொள்ளைகளினால் வியாபாரிகள் தமது வியாபாரமுயற்சிகளை கைவிடுவார்களேயானால் அது சமூகத்திற்கு கேடாக முடியும் என்பதை இச்சித்தாந்த தெளிவற்ற இயக்கங்கள் மறந்து தமது ஆதரவாளர்களை வைத்து இக்கொள்ளைகளை ஆதரிக்கின்றனர்.

இன்று சில இயக்கங்கள் நிதி நிறைவு இல்லாமையால் சில பிற்போக்கு வாத அரசியல் கும்பல்களிடம் சரணடைந்துள்ளன. வேறு சில இவ்வாறான கொள்கைகளை மேற்கொண்டு மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்திவருகின்றனர். இதனால் மக்கள் கொதிப்படைந்து இயக்கங்களை வன்மையாகக் கண்டித்து வருகின்றனர் என்பதை பத்திரிகைகள் வாயிலாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

முதலாளித்துவத்தை முறியடிக்க வேண்டும் என்ற கூக்குரலால் அதன் கருத்தை அறியாத குட்டிச்சாத்தான் போராளிகள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இவர்களை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியாமல் சில தலைமைகள் தலைமைகளாக இயங்குகின்றன. இவர்களுக்கெதிரான போராட்டத்தை மக்கள் முன்னெடுக்கும் சூழ்நிலை தொடங்கியுள்ளது. அப்பொழுது தான் இவர்களின் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகள் முற்றும் முழுதாக மக்களால் முறியடிக்கப்படும்.

இன்று மக்களையும், விடுதலைப்போராட்டத்தையும் சரியான பாதையில் வழிநடத்திச் செல்வது தமிழீழமக்கள் விடுதலைக்கழகமாகும். இதனைப்பொறுக்காத காழ்ப்புணர்வு கொண்டவர்கள் கழகத்திற்கெதிராகத் தம்மை வளர்த்துக்கொள்ள மேற்கொள்ளும் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளே இக்கொள்கைகளாகும். இக்கொள்கைகளை தமிழீழமக்கள் விடுதலைக்கழகம் வன்மையாகக்கண்டிக்கின்றது.

சிவச்சந்திரன், பிரான்ஸ்

## ।. — எல்சல்வடோர் அமரிக்க இராணுவச் செலவீனம் —. ।

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், அதன் கைப்பொம்மை எல்சல்வடோர் அரசாங்கத்திற்கும் எதிராகப் போராடிக்கொண்டிருக்கும் எல்சல்வடோர் போராளிகள், சமீபகாலங்களில் தங்கள் தாக்குதல்களை விரிவுபடுத்தியிருக்கின்றனர். ஐந்து விடுதலை இயக்கங்களின் கூட்டணியான F.M.L.N கிராமபுறங்களில் நடாத்திவந்த இராணுத்தாக்குதல்களை நகர்ப்புறங்களை நோக்கி மாற்றியுள்ளது.

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட எல்சல்வடோர் போராளிகள், பேச்சுவார்த்தையை அரசாங்கம் அரசியல் ஆயுதமாகப் பாவித்தது எனக்குற்றம் காட்டியுள்ளார். அமெரிக்க இராணுவம் எல்சல்வடோரை ஆக்கிரமிக்காமல் இருப்பதை அடித்தளமாக வைத்து ஒரு உடன்படிக்கைக்கு வரமட்டுமே எல்சல்வடோர் போராளிகள் முயன்றனர். எந்த நிபந்தனைகளின் கீழும் நாங்கள் ஆயுதத்தை கீழே போட மாட்டோம், நாங்கள் ஒரு போதும் ஆயுதத்தை கீழே போட மாட்டோம் என அவர்கள் அறிவித்துள்ளனர்.

கொரில்லாத்தலைவர்கள் சரணடைந்து விட்டார்கள், கொல்லப்பட்டுவிட்டார்கள் என்ற அரசாங்கத்தின் பொய்ப்பிரச்சாரங்களை முறியடித்து, பணயக்கைதியாக எல்சல்வடோர் ஜனாதிபதியின் மகளைக் கடத்தியது—டன், ஒரு அரச இராணுவ பயிற்சி நிலையத்தையும் முற்றுகையிட்டு தகர்த்ததில் பல இராணுவ பயிற்சியாளர்கள் கொல்லப்பட்டு உள்ளார்கள்.

கடந்த ஐந்து வருடங்களில் அமெரிக்க இராணுவ நிபுணர்களால் பயிற்றப்பட்ட எல்சல்வடோர் இரா–னுவம் 50,000 மக்களுக்குமேல் கொன்று குவித்துள்ளது. எல்சல்வடோரில் இராணுவ நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா வழங்கும் நிதியுதவி வருடாந்தம் அதிகரித்துக் கொண்டு சென்றாலும், எல்சல்வடோர் போராளிகள் நாட்டின் மூன்றிலொரு பகுதிக்குமேல் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். வருடாந்தம் அதிகரிக்கும் அமெரிக்காவின் எல்சல்வடோருக்கான இராணுவ செலவீனம் **46ம் பக்கத்தில்** பிரசுரிக்கப்பட்டுள்ளது.

---

வீரகேச

# கொள்ளைகள் நிறுத்தப்படவேண்டும் இன்றேல் அடையாளம் காட்டப்படவேண்டும்'

## இயக்கங்களுக்கு ஊர்மக்கள் அழைப்பு; கேட்டபோது கொடுத்தோம்! இப்பொழுது அபகரிப்பா?

16-10-85

(யாழ். அலுவலக நிருபர்)

புத்தூர், நவக்கிரி, சிறுப்பிட்டி, ஆவரங்கால், நீர்வேலி ஆகிய பகுதிகளில் ஊர் பொதுமக்கள் வீதித் தடைகளை போட்டு கண்காணித்து வருவதால் இப்பகுதியில் உள்ள பிரபல கல்லூரிகள் உட்பட பல பாடசாலைகளில் மாணவரின் வரவு வீழ்ச்சியடைந்துள்ளது.

அதே சமயம் சில தனியார் கல்வி நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. கடந்த வெள்ளியன்று புத்தூர், நவக்கிரி கிராமங்களில் இடம்பெற்ற கொலை, கொள்ளைச் சம்பவங்களை கண்டித்து மேற்படி 5 கிராமங்களையும் சேர்ந்த பொதுமக்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

சுமார் 15 மைல் சுற்றளவுள்ள இக்கிராமங்களின் பிரதான வீதிகளில் ஆங்காங்கே தடைகள் போடப்பட்டுள்ளமையால் புததூர் சோமாஸ்கந்தா கல்லூரிக்கு வெளியிடங்களில் இருந்து வரும் மாணவரின் வரவு பெருமளவு குறைந்துள்ளது சில பாடசாலைகள் மாணவர்கள் இன்றி வெறிச்சோடிக்கிடக்கின்றன.

### கண்டனக் கூட்டம்

இதேவேளை புத்தூர் சந்தியிலும் மற்றும் இக்கிராமங்களின் பொது மக்கள் கூடும் இடங்களிலும் தினசரி மாலை கண்டனப் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

நேற்றுமுன்தினம் மாலை புத்தூர் சந்தியில் நடந்தகூட்டத்தில் வயோதிபர்கள், பெண்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

ஆயுதப்பாணிகளாக வந்து உடைமைகளை சூறையாடிச்செல்லும் இனந்தெரியாத இளைஞர்களை இனம் காட்ட வேண்டும் அல்லது கொள்ளைகளையும் நீதியற்ற கொலைகளையும் முற்றாக நிறுத்த வேண்டும் என்று ஏகமனதாக இக்கூட்டத்தில் குரல் எழுப்பப்பட்டது.

இயக்கத்தின் பெயர்களைச் சொல்லிக்கொண்டு தம்மிடம் வந்து உணவு மற்றும் உதவிகளை பெற்றவர்களே இப்பொ

[3 ஆம் பக்கம் பார்க்க]

# — விடுதலைப்போராட்டமும்
# வெளிநாட்டுத் தமிழ்ப் பெண்களும் —

இன்று வெளிநாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்ப்பெண்கள் அனேகமானோர் தாயீநாட்டை மறந்து விட்டார்கள் என்றே கூறலாம். இவர்களின் போக்கிலிருந்தே விடுதலையின் பங்கு எம்மட்டில் என்று தெளிவாகின்றது. கடந்துபோன காலங்களை மறந்து, ஒரு புதிய வாழ்க்கையில் புகுந்துவிட்டோம் என்றநினைப்புத்தான் பல பெண்களின் மனதில் மேலோங்கி நிற்கின்றது. தாய்நாட்டையோ அல்லது அங்கு அழிந்து கொண்டிருக்கும் இளைஞர்கள், பெற்றோர்கள், குழந்தைகள், இளம்பெண்களைபற்றியோ கவலைப்படுகின்றார்கள் என்று கூறிவிட முடியாது. செய்தி அறிந்ததும் சிறிது அதைப்பற்றி பேச்சு (ஆண்களும்தான்) பின் மறந்து விடுவார்கள். அடுத்த செய்தியும் சூடாக வந்து ஆறிவிடும். அதற்கு நாம் என்ன செய்வது என்ற அனுதாப வார்த்தை மட்டும் வரும்.

ஆனால் நாம் எந்த மட்டில் விடுதலையில் பங்கு செலுத்தினோம், செலுத்தப்போகின்றோம் என்ற கேள்வி மனதில் எழும்புவதே இல்லை. இக்கேள்வி எழும்பாமல் நம்மைச்சுற்றி நாமே ஒரு மாயவலையை போட்டுக்கொண்டிருக்கின்றோம். தமிழீழத்தில் இன்று இருந்திருப்போமானால் எம்மை விடுதலை தயாரிப்பில் ஈடுபடுத்த முன்நின்று இருப்போம். ஆனால் இங்குள்ள சூழ்நிலையில் ஒரு பாதுகாப்பிற்குள் இருக்கின்றோம், எமக்கும் விடுதலைக்கும் வெகுதூரம் என்ற நினை

ப்பில் எம்மை மாற்ற முயன்று கொண்டு இருக்கின்றோம் அல்லது தமிழீழம் கிடைக்க வெகு தொலைவு இருக்கின்றது இதற்கேன் இப்பவே உதவிகள் செய்யவேண்டும்? என்ற நினைப்பும் பலர் மனதில் உண்டு. இது தவறு இங்கு நாம் வாழ்வது என்பது நிச்சயமற்றது. இன்றோ நாளையோ நாம் வெளியேற்றப்படுவோம். என்பது நிச்சயம் உறுதியானது. நாளை தமிழீழத்தில் போய்நின்று கொண்டு, வெளிநாட்டில் இருந்து வந்தோம் என்று புகழ்பாடினோமானால் தமிழீழப்பெண்களாலேயே தூக்கி எறியப்படுவோம்.

இன்று தமிழீழத்தில் ஆண்களைவிட பெண்களே அதிகமாகவும் உள்ளார்கள். இளைஞர்களில் அநேகமானோர் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள தப்பியோடி வந்துவிட்டார்கள். அங்கு விடுதலையில் கூடப்பங்கு எடுக்கப்போவது பெண்களும் குழந்தைகளும்தான். இந்த மட்டில் தொடர்ந்தும் நாம் தப்பியோடி வந்த இளைஞர்களுக்கு துணையாக அவர்களுக்கு வாழ்க்கை துணைவியாக, அவர்களின் விடுதலைப்பங்கை எடுத்துரைக்காமலும் நாமும் அதில் ஈடுபடாமல் இருந்தோமானால் அது தமிழீழப்பெண்களுக்கும் நாட்டுக்கும் செய்யும் துரோகமாகும்.

ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால் என்று யாரோ ஒருவர் சொன்னார், ஏன் நீங்கள் தமிழீழத்தின் ஈக்கத்தையும் சிங்கள இராணுவத்தின் அழிவையும் உண்டாக்ககூடாது. கட்டாயம் கூடும். ஒவ்வொரு மனைவிமாரும் தமது கணவன்மாரைத் திருத்துவதன் மூலம் தாமும் விடுதலையில் பங்கு எடுக்க முடியும்.

சில பெண்கள் கணவன்மாரைக் குறித்து அது அவர்பார்த்துக் கொள்ளட்டும் என்ற ஒரு வார்த்தையை சொல்லி விடுவார்கள். இன்னும், இங்கும், வருங்காலத்திலும் அடுப்படி பச்சிகளாகவே இருக்க பல பெண்கள் விரும்புகின்றார்கள். இதற்கு கணவன்மாரும் வழிவகுக்கின்றார்கள். எந்த ஒரு விடுதலை விரும்பிகள் கருத்தரங்குகளிலும் பெண்களைகாண்பது அரிது. முன்புதான் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இங்கு பெண்கள் குறைவு. இப்போ அநேகமாக முன்புவந்த, இளைஞர்களில் பாதிப்பேர் திருமணம் செய்துவிட்டார்கள் வருகின்றவர்களும் குடும்பத்தோடு பலர் வருகின்றார்கள். ஆனால் இன்னும் அதே நிலை! எத்தனை விடுதலை விரும்பிகள் தமது மனைவிமாரை விடுதலை இயக்க கருத்தரங்குகளுக்கு அழைத்துவந்து அவர்களின் விடுதலைப்பங்கை முக்கியப்படுத்தியிருப்பார்கள். ஏன் இந்ததாழ்வுணர்ச்சி? ஏன் இன்னும் நாம் முன்னேறவில்லை? தாய்மாருக்கும், மனைவிமாருக்கும், இளம் பெண்களுக்கும் விடுதலையில் முக்கிய பங்கில்லையா? பெண்களின் விடுதலைக்கும் இதன்மூலம் வழிவந்து விடும் என்று பல கணவன்மார் முக்கியமாக விடுதலையின்பால் பற்று கொண்டிருக்கும் தோழர்கள் இன்னும் பின்நிற்கின்றார்கள். இதன் முதற்கட்டம் நமது சமுதாயத்தில் பெண்ணடிமைத்தனத்தை இன்னும் விரும்புகிறார்கள் என்பதுதான்.

பெண்கள்படும் கஸ்டம் யாரும் அறியாத செய்தியல்ல. இனிமேலும் நாம் இருட்டறைக்குள் இருப்பது நியாயமல்ல. தமிழீழவிடுதலையில் பங்கு பெறுவதன் மூலம், தமிழீழ பெண்களின் விடுதலைக்கும் வழிவகுக்கலாம். அதுவும் வெளிநாட்டில் இருக்கும் பெண்களுக்கு இது ஒரு நல்லசந்தர்ப்பம். எமது சமுதாயத்தில்தான் கட்டுப்பாடுகள் —

அதிகம். அந்நிலை இங்கு இல்லை என்றே கூறலாம். ஆனால் அதற்காக தவறான வழியை நோக்கி செல்வதில் அர்த்தமில்லை. சில பெண்கள் இங்கு வந்தும்கூட சில சமுதாய வரட்டுக் கௌரவங்களை விடுவதாய் தெரியவில்லை. இரண்டு பெண்கள் கூடினால் இன்னும் இரண்டு பெண்களைப்பற்றி வர்ணிப்பதுதான் அவர்களின் பேச்சு, அந்த பெண்ணின் நடை உடை, பாவனை அத்தனையும் தவறான கண்ணோட்டத்தில் பார்த்து அதற்காக வீணாக நேரத்தை செலவழிக்கின்றார்கள். ஆனால் அப்பெண்ணின் நல்ல போக்குகளை கதைப்பதே இல்லை. இதுதான் தமிழீழத்திலும் நடந்தது, தொடர்ந்தும் அதை இங்கு பின்பற்றுகின்றனர். நான்கு பேர் கூடிக்கதைக்குமிடத்தில் நமக்குத் தேவையானவைகளையும், நல்லவைகளையும், தமிழீழத்தின் போராட்டத்தையும் அதற்காக நாம் என்ன செய்யலாம் என்பதையும் கதைத்தால் என்ன?

இப்போ அடிக்கடி திருமணங்கள் நடைபெறுவதுண்டு இங்கு வரும் பெண்கள் என்ன உடுக்கின்றார்கள், என்ன நகை அணிந்திருக்கின்றார்கள், எப்படிச்சாப்பாடு இவைகள்தான் மறுநாள் யார் அகப்படுகின்றார்களோ அவர்களிடம் குறை கூறி வம்பளப்பது, இது தேவைதானா? நாம்பாதுகாப்போடு இருக்கின்றோம் என்பதாலா இப்படியான பொழுது போக்கு பெண்களுக்கு ஆசைகள் அதிகம்தான் அதற்காக ஆசைகள் இல்லாமல் இருக்ககூடாது என்று சொல்லவரவில்லை. நாம் தமிழீழத்தில் வாழ்ந்த வாழ்க்கைக்கும் இங்கு வாழும் வாழ்க்கைக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. எமக்கு கிடைக்கும் சுகபோக வாழ்க்கையில் இருந்து ஓரடி முன்னே வைத்து எமது தமிழீழப்பெண்களின் நிலையை —

-சற்றே முற்போக்கு ரீதியாக சிந்திக்க முற்பட்டால் எல்லாம் தெட்டத்தெளிவாகும்.

தோழர் உமாமகேஸ்வரன் சொன்னது போல் தனி ஒரு பெண் போராடுவதன் மூலம், அவளின் கொள்கையை சமுதாயம் ஏற்பதற்கு பதிலாக சமுதாயத்தில் இருந்து அவள் தூக்கி எறியப்படுவாள். அல்லது தனி ஒரு பெண்ணுக்கு விடுதலை கிடைத்துவிட்டது என்பதற்காக முழுப்பெண்களுக்கும் விடுதலை கிடைத்தது என்று அர்த்தமல்ல.

இங்கிருக்கும் பெண்கள் ஒரு இறுக்கமான மகளிர் அமைப்பை உருவாக்குவதன் மூலம் தமிழீழவிடுதலைக்கும் எதிர்காலத்தில் பெண்களின் விடுதலைக்கும் வழி அமைக்கலாம். உங்களுக்கு ஒரு சிலருக்கு கிடைத்த விடுதலையின் மூலம் மற்ற பெண்களுக்கும் விடுதலை கிடைக்க, தமிழீழ விடுதலையில் முக்கிய பங்கெடுக்க வழிவகுப்பதுதான் உங்களுக்கு கிடைத்த வெற்றியின் பலனாகும்.

## தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் பெண்கள் அமைப்புகளுடனான தொடர்புகளுக்கு :-

**P.L.O.T**

WOMENS WING,
POSTFACH 106,
7146, TAMM.

ஜனசக்தி 8—9—85 3

# நாடுகடத்தலுக்குப் பின்

திருவாளர்கள் பாலசிங்கத்தையும், சந்திரஹாசனையும் நாட்டைவிட்டு வெளியேற்ற இந்திய அரசாங்கம் முடிவு ...

எனினும், அவர்களின் நடவடிக்கைகள் ஸ்ரீலங்காவிலும் சரி. வெளிநாட்டிலும் சரி, இனவெறித் தீயை தூண்டி விடுவதிலும் கணிசமாக பங்

வெளிநாட்டிலுள்ள இந்தக் குழுக்கள் சில கொரில்லா குழுக்களின் நடவடிக்கைகட்கு பணம் கொடுத்து வருகின்றன; இந்த கொரில்லா குழுக்களில பல சந்தேகத்திற்கு இடமற்ற ...

கொள்வதை சுனுவார்... ளர். இதற்கு எல்லா... களுக்கும் (அவர்க... வாழ்ந்தாலும் சரி, எ... கத்தை சேர்ந்துள்ள... இருந்தாலும் சரி. இல்லை) எல்லா

திருவாளர்கள் பாலசிங்கத்தையும், சந்திரகாசனையும் நாட்டைவிட்டு வெளியேற்ற இந்திய அரசாங்கம் முடிவு செய்தது. திரு. சத்தியேந்திர ன் மீதும்நாடு கடத்தும் ஆணை பிரபித்தது: அந்த ஆணை கிடைக்கும் முன்பே சத்தியேந்திரா அவசரமாக வெளிநாடு சென்றுவிட்டார். இந்திய அரசாங்கத்தின் இந்த முடிவின் நியாயஅநியாயங்களைப்பற்றி யாரும் விவாதிக்க விரும்மமாட்டார்கள். ஆனல் இந்த முடிவை தூண்டி விடக்கூடியதாக வெளிப்படையாகத் தெரிகிற காரணங்கள் புரிந்து கொள்ளத்தக்கவையாகும்.

இந்திராகாந்தி மற்றும் லோங்கோவால் படுகொலைகளோடு நிறுத்திக்கொள்ளாமல் இப்போது அகாலிதளத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள பஞ்சாப் ஒப்பந்தத்தை சீர்குலைத்து உடைத்தெறியும் திசையில் பஞ்சாபில் ஆயுதமும் பணமும் கொடுத்து பஞ்சாபில் பிளவுவாத நடவடிக்கைகளை வளர்த்துவரும் வெளிநாட்டில் உள்ள சீக்கியர்கள் வகிக்கும் பிற்போக்கான பாத்திரம் குறித்து இந்தியாவிற்கும் கசப்பான அனுபவம் இருந்து வந்துள்ளது.

இந்த சீக்கிய பிற்போக்காளர்களைப்போல் வெளிநாட்டில் இருந்து செயலாற்றும் சில பணம்படைத்த இலங்கைத்தமிழர் அமைப்புக்கள் அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகளில் இருந்து கொண்டு செயலா

ற்றுகின்றன. அந்த நாடுகளில் அவை சந்தேகிக்கதக்க அரசி யல் மற்றும் பந்தோபஸ்து வட்டாரங்களுடனி தொடர்புவை த்துக்கொண்டுள்ளன. இவைமேலே சொன்ன வெளிநாட்டு சீக் கியர் எந்த அளவிற்கு இன்னும் செல்லாமல் இருக்கக்கூடும் எனினும், அவர்களின் நடவடிக்கைகள் ஸ்ரீலங்காவிலும் சரி, வெ ளிநாட்டிலும் சரி, இனவெறியைத்தூண்டி விடுவதிலும் கனிசமாக பங்காற்றியுள்ளன.

வெளிநாட்டில் இருந்து செயலாற்றும் பணவசதி உள்ள இந்தக்குழுக்களைப்பற்றி ஒன்று தெளிவாகத் தெரிகின் றது. வெளிநாட்டில் தாம் அனுபவித்துவரும் சௌகரியமான வாழ்க்கையைக் கைவிட்டுவிட்டு ஸ்ரீலங்காவில் கொரில்லாக் குழுக்கள் நடத்திவரும் தீவிர போராட்டங்களில் நேரடியா கப் பங்கு கொள்ளும் நோக்கமோ, ஸ்ரீலங்காவில் இருந்து வரும் தமிழர்கள் அனுபவிக்கும் கஸ்டநஸ்டங்கள் மற்றும் அ பாயங்களில் பங்கு கொள்ளும் எண்ணமோ அவர்களுக்கு கி டையாது.

ஈழம் நடைமுறையில் அமைந்தாலும் கூட அவ ர்கள் அங்கே குடியிருந்து வாழ்வதற்கு திரும்பி வரமாட்டா ர்கள். ஒருவேளை தங்களிடம் உள்ள உபரி ரொக்கத்தை முதலீடு செய்யக்கூடும், அவ்வளவுதான்.

சில கொரில்லாக்குழுக்கள் – குறிப்பாக, தமிழ் ஈழமக்கள் விடுதலைக்கழகம் வெளி நாட்டிலுள்ள இந்தக் குழுக்கள் பலவற்றின் நடவடிக்கைகளை கண்டித்துள்ளன, அவை அமெரிக்க சி. ஐ. ஏ வின் ஏஜன்சிகள் என்றும் கூட குற்றம் சாட்டியுள்ளன.

இப்படி இருந்த போதிலும், இவற்றின் நடவடி க்கைகளின்பால் தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியும் இலங்கை

தமிழர் எல்லா அமைப்புகளும் அதிகபட்ச எச்சரிக்கை கையாள்வது விவேகமாக இருக்கும்.

வெளிநாட்டிலுள்ள இந்தக்குழுக்கள் சில கொரில்லாக் குழுக்களின் நடவடிக்கைகளுக்கு பணம் கொடுத்து வருகின்றன; இந்தக் கொரில்லாக் குழுக்களில் பல சந்தேகத்திற்கு இடமற்ற தைரியத்தையும் அர்ப்பணிப்புத்தன்மையையும் கொண்டிருந்த போதிலும் அவற்றிடம் பக்குவப்பட்ட அரசியல் தலைமை இல்லாத காரணத்தாலும், இவற்றிற்கு நிதியளித்து வருகிற காரணத்தாலும் மேற்படி வெளிநாட்டு குழுக்கள் இவற்றின் மீது தமது சொந்த தலைமையையும் தனிப்பட்ட நலன்களையும் அரசியல் போராட்ட உத்திகளையும் சுமத்துகின்றன.

இவற்றில் பிரதான பிரதான விதிவிலக்காக இருப்பது தமிழீழமக்கள் விடுதலைக்கழகம் என்று தெரிகிறது உமாமகேஸ்வரன் போன்ற அதன் தலைவர்கள் இதர கொரில்லாக்குழுக்களை விட எவ்வளவோ மேலான ஞானத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். இலங்கையிலுள்ள அசல்பிரச்சனைகள், இலங்கைத்தமிழரின் அவலநிலைக்கான சமுதாயம் மற்றும் அரசியல் காரணங்கள் போராட்ட உத்திகள், தேசிய விடுதலைப்போராட்டங்களுக்கும் சமுதாய விடுதலைப்போராட்டங்களுக்கும் இடையே உள்ள உறவுகள் முதலியவைப்பற்றி எவ்வளவோ மேலான அரசியல் ஞானத்தை காட்டி வந்துள்ளனர்.

பாலசிங்கம் போன்ற வெளிநாட்டுத் தலைவர்கள் (இவர் ஒரு பிரிட்டிஸ் பிரஜை) வெளிநாடுகளிலுள்ள பணபலம் படைத்த இலங்கைத் தமிழர்கள் கொரில்லா இயக்கத்தில் குறிப்பாக, தமிழீழவிடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும்

ஈழ தேசிய விடுதலை முன்னணியில் அங்கம் வகிக்கும் ஸ்தாபனங்களிலும் செல்வாக்குள்ள பதவிகளைப் பிடித்துக் கொள்வதை சுலுவாக்கியுள்ளனர். இதற்கு எல்லாத்தமிழர்களுக்கும் (அவர்கள் எங்கே வாழ்ந்தாலும் சரி, எந்த வர்க்கத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, கவலை இல்லை) எல்லா சிங்கள மக்களுக்கும் (இவர்கள் வர்க்க வேறுபாடின்றி ஒட்டு மொத்தமாக "சிங்கள ஏகாதிபத்தியம்" என்று குறிப்பிடபடுகின்றார்கள்) இடையே இந்த போராட்டம் நடக்கிறது என்கிற "தத்துவத்தை" பயன்படுத்துகின்றார்கள்.

அதுமட்டுமல்ல; "அடித்துவிட்டு ஓடி ஒளிவது" என்கிற அதிக நஸ்டம் ஏற்படுத்தக்கூடிய போர் உத்திகளையும் அவர்கள் ஆதரித்துப் பேசுகிறார்கள்.

இந்தப் போர் உத்திகளால் ஸ்ரீலங்காவில் இருந்து வருகிற தமிழர்கள் மீது (எதிரடியாக விளையக்கூடியபின் விளைவுகளைப் பற்றி இவர்கள் கவலைப்படுவதில்லை. மேலும் பிரிந்து சென்று ஒரு தனி அரசு அமைப்பது மூலமாக மட்டுமே இலங்கைத்தமிழர்களால் தமது சுயநிர்ணய உரிமையை செயல் படுத்த முடியும் என்று அடித்துப் பேசுகின்றனர். அவ்வப்போது "சோசலிஸ்ட்" லட்சியங்களைப்பற்றி பேசிய போதிலும் கூட அவர்கள் ஸ்ரீலங்காவிலும் வெளிநாட்டிலும் உள்ள சோசலிச சக்திகளுக்கு வகையாகவே இருந்து வருகின்றனர்.

இதற்கு மாறாக, தமிழீழமக்கள் விடுதலைக்கழகத்தலைவர்கள் இந்த "அடித்துவிட்டு ஓடி ஒளிவது" என்கிற போர் உத்திகளின் குருட்டுத்துணிச்சலை பகிரங்கமாகவே கண்டித்துள்ளனர். ஒரு சோசலிச ஸ்ரீலங்கா அமைக்கப்

பெற்ற நிலைமைகளின் கீழ் மட்டுமே இலங்கைத்தமிழர்களி ன் தேசிய பிரச்சனைகளுக்கு முழுமையான தீர்வு காணமுடி யும் என்றும் தமிழீழமக்கள் விடுதலைக்கழகம் அங்கீகரிக் கின்றது. சிங்களவர்களிடையே உள்ள உழைக்கும் மக்களை விரோதிகளாக மதிக்காமல் நண்பர்களாக மதிக்கிறோம் என்றும் தமிழீழமக்கள் விடுதலைக்கழகம் கூறுகின்றது, இதன் வெளிச்சத்தில் பார்க்கும்போது அவர்கள் ஏன் "ஈழம்" என் கிற பிளவுவாத கோஷத்திற்கு இன்னும் விசுவாசம் செலுத் துவதாக ஏன் பிரகடனம் செய்கிறார்கள் என்பதை விளக்க வில்லை.

மோதல் நிறுத்த உடன்பாடும் திம்பு பேச்சுவா ர்த்தைகளும் அறிவிக்கப்பட்டபோது வெளிநாட்டிலுள்ள இல ங்கைத்தமிழ் குழுக்களால் தமது பீதியையும், கோபத்தையு ம் மறைக்க முடியவில்லை. இவ்விஷயத்தில் அவர்கள் இன்று சிரிமாவோ பண்டாரநாயக்காவின், ஸ்ரீலங்கா சுதந்திரகட் சியின் தலைமையில் அணிசேர்ந்து வரும் "தேசிய முன்னணி யில்" திரளும் சிங்கள இனவெறியர்கள் போலவே காட்சிய ளிக்கின்றனர்.

வெளிநாட்டு இலங்கைத்தமிழர்களின் பத்திரி கைகள் இந்த முடிவை கண்டித்து பலமாக கூக்குரலிட்டன. ராஜீவ் காந்தியையும், ரொமேஷ் பண்டாரிபற்றியும் கூக்கு ரலிட்டன. பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும்படி அ வர்கள் கொரில்லாத்தலைவர்களின் கையை திருகி நிர்ப்ப ந்தித்து வருகின்றார்கள் என்றும் குற்றம் சாட்டின.

லண்டனில் இருந்து வெளிவரும் "தமிழ் டைம்ஸ்" என்ற பத்திரிகை 1985 ஜுலையில் எழுதிய தலையங்க த்தில் "திம்புவில் நடந்த பேச்சுவார்த்தைகளில் ஓர்

வெற்றிகரமான முடிவு ஏற்படும் என்று ஒரு பிறவி முட்டாள் மட்டுமே எதிர்பார்த்திருப்பான்" என்று எழுதியது. அதே இதழில் இலங்கையை விட்டு அமெரிக்காவில் குடியேறியிருக்கும் பேராசிரியர் ஓ.ஜெயரத்தினம் வில்சன் என்பவர் பிரதமர் ராஜீவ் காந்தி தரும் தீர்வு "செயலாக்க முடியாதது" ஏனெனில் எந்த உடன்பாட்டையும் சிங்களவர்கள் மதித்து அமுலாக்குவார்கள் என்று நம்பமுடியாது என்று எழுதியுள்ளார். இவர் ஒரு காலத்தில் பல தடவைகளில் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனவுக்கு அரசியல் சட்டவிவகாரங்கள் பற்றி ஆலோசகராகவும் இருந்து வந்திருப்பவர்.

வழக்குரைஞர் என்.சத்தியேந்திரா ஒரு காலத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் தொழிலாளர் கொள்கைகளை வகுக்கும் சிற்பி. நம்பமுடியவில்லையா? ஆனால் அதுதான் உண்மை . மேலும் தொழிலாளர் அமைச்சர்களின் செயலாளர் இவர் திம்பு பேச்சுவார்த்தையில் தமிழ் ஈழ விடுதலை ஸ்தாபனத்தின் பிரதிநிதியாக பேச்சு நடத்த உடனே இந்தியாவுக்கு புறப்பட்டுச் சென்றார். சில கொரில்லாக்குழுக்களுக்கும் ரொமேஷ் பண்டாரிக்கும் இடையே காரசாரமான வாக்குவாதம் நடைபெறக்காரணமாக இருந்தார்.

"அருமையான மூளை படைத்தவர்" என்றும் தன்னைப்போல பாதுகாப்பு அமைச்சராக இருக்கத்தக்கவர் என்றும் அத்துலத் முதலியால் வருணிக்கப்பட்ட பாலசிங்கம் சென்னையில் பத்திரமாக இருந்து கொண்டு, தனி ஈழம் வழங்கப்படாவிட்டால் என்ன நடக்கும் பார் என்று கடுமையான அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தார்.

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு வேப்பங்காயாக உள்ள எஸ்.சி.சந்திரகாஹாசன் பின்னால் இருந்து கொண்டு செயல்பட்டு வந்தார். திரு.ராஜீவ்காந்தியின் சமாதான முயற்சிகளுக்கு பகிரங்கமாக ஆதரவு அளிக்க ஒப்புக்கொண்ட பிறகு அவருடைய நாடு கடத்தல் உத்தரவு இப்போது விலக்கிக் கொள்ளப்பட்டது.

நாடு கடத்தல் உத்தரவுக்கு நியாய அநியாயங்கள் இருந்த போதிலும் அது, சில ஈழத்தேசிய விடுதலை முன்னணித்தலைவர்கள், மற்றும் அவர்களின் சுயநியமிப்பு ஆலோசகர்கள் அவர்களின் இயக்கத்தின் சுயேட்சையான பலம் பற்றியும் அவர்கள் பெற்றிருந்த அளவற்ற "இராணுவ வெற்றி" பற்றியும் சொல்லி வந்த அதீதப் பெருமைகளை கலைத்துவிட நிச்சயமாக உதவியது.

முதல் நாள்தான் சிங்களவர் மீது "முழுமையான போர்" என்று பிரகடனம் செய்த ஏ.எஸ் பாலசிங்கம், தனக்கு நீரழிவு நோய் இருப்பதால் காவலில் இருந்து விடுதலை செய்யுங்கள் என்று இந்திய அரசிடம் மனு கொடுத்தார். பின்னர் லண்டனுக்கு விமானத்தில் அனுப்புவதை ஒப்புக்கொண்டார்.

சத்தியேந்திரா முதலிலேயே தாவிச் சென்றுவிட்டார். சந்திரகாஹாசன் அமெரிக்காவிற்கும், இந்தியாவிற்கும் விமானத்தில் பறந்து கொண்டிருந்தார். இவர் சம்பந்தமாக இந்திய நீதி மன்றங்களில் ரிட் மனுக்கள் அனுமதிக்கப்பட்டன. பிரபாகரன் "தலைமறைவானார்" என்று செய்திகள் கூறுகின்றன.

வெளிநாடுகளில் உள்ள இந்தப்பணக்காரத் தமிழர்களின் இந்தக் குழப்ப நடவடிக்கைகள்

திம்பு பேச்சுவார்த்தையை சீர் குலைப்பதிலேயே முடிந்தது. இந்திய அரசுக்கும் தமிழ் கொரில்லாக் குழுக்களுக்கும் இடையே பகையான மோதலைக் கொண்டு வந்தன இலங்கையின் இதர பகுதி மக்களுக்கும் இந்தியாவுக்குமிடையே பகைமையான மோதல்களை வளர்த்துவிட முயன்ற அமெரிக்காவில் உள்ள சூத்திரதாரிகள் இதைத்தான் சாதிக்க விரும்பினார்கள் போலும்.

ஈழம் தேசிய முன்னணியில் உள்ள நான்கு கொரில்லாக் குழுக்களும் பேச்சு வார்த்தைக்கு திரும்ப முடிவு செய்தால் அவர்கள் அப்படி செய்வார்கள் என்று எல்லாராலும் விரும்பப்படுகிறது. அவர்கள் தங்களின் வெளிநாட்டிலுள்ள "ஆலோசகர்களை" கை விடுவது நல்லது. அவர்கள் தங்கள் சொந்தக் காலில் நின்று தங்களின் சொந்தப் பொறுப்பில் பேச்சுவார்த்தையை நடத்தவேண்டும்.

ஈழ தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த குழுக்களுக்கு தற்காலிகமாக ஏற்பட்டுள்ள ஏமாற்றத்தைக்கண்டு நமது (ஜெயவர்த்தன) அரசாங்கம் மகிழ்ச்சி பாராட்டி திருப்தி கொள்ள ஒரு காரணமும் இல்லை திம்புவில் நடந்த இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் முறிந்துப் போனதிற்கு பணம் படைத்த வெளிநாட்டு இலங்கைத்தமிழர் செலுத்திய பங்கைவிட இலங்கை அரசாங்கம் செலுத்திய பங்கு மேலும் அதிகமாகும். இலங்கை கம்யூனிஸ்ட் ஆட்சியும் ஸ்ரீலங்கா சமாஜக் கட்சியும் எஸ் எல் எம்பிக் கட்சியும் அமைந்துள்ள கூட்டணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ள கொள்கை ஊழியர் இந்த அரசாங்கம் நிலைமையை திருத்தாவிட்டால் இந்த அரசாங்கமும் கூட

[தொடர்ச்சி 21ம் பக்கத்தில்]

# தமிழீழ தகவல் நடுவம்

**THAMILEELAM INFORMATION BUREAU**

பதிவு செய்யப்பட்ட செய்திகளுக்கான

தொலைபேசி இலக்கங்கள்

| | | |
|---|---|---|
| UNITED KINGDOM | ... | 01-470 6270 |
| WEST GERMANY | ... | 07141-603970, 02101/150527 |
| NORWAY | ... | 02-383259 |
| HOLLAND | ... | 020-650958 |
| SWITZERLAND | ... | 031-587496 |
| CANADA | ... | 514- 387 0872 |
| FRANCE | ... | 2015980 |

**24** மணிநேர சேவை
HOURS SERVICE


தமிழீழ மாணவர் பேரவையின் மேற்கு ஜேர்மனிக்கிளையுடனான தொடர்புகளுக்கான முகவர்:-

Para. SINNADURAI
POSTFACH 101306
4040 NEUSS-1

பொங்கும்
**தமிழமுது**

ஏகாதிபத்தியத்திற்கெதிரான
தென்னாபிரிக்க மக்களின் போராட்டத்தை
மரணங்களால் தோற்கடிக்க முடியாது.

